# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 378

சனி, 14 பெப்ரவரி , 2026 |

பக்கங்கள் 15

www.ilakku.org




## சுவிட்சர்லாந்து தூதரக தலையீடு தமிழ்த்தேசிய தார்மீகத் தோல்வி

பாலா



ஈகைப்பேரொளி முருகதாசன் 17ஆவது நிறைவாண்டின் நினைவுகளோடு…



## ஏகபோக அரசியலுக்கு முற்றுப்புள்ளி: மலையகத்தில் துளிர்விடும் “தேசிய மக்கள் சக்தி”

மருதன் ராம்

வேல்ஸில் இருந்து அருஸ்



## அமெரிக்காவின் தாக்குதலில் இருந்து ஈரானை காப்பாற்றுமா சீனா?

# குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அழைப்பை புறக்கணித்த கோட்டாபய!



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அவர் அங்கு பிரசன்னமாகவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இடம்பெற்று வரும் விசாரணை ஒன்றுக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முன்னதாக அவருக்கு அழைப்பு விடுத்திருந்தது.

கோட்டாபய ராஜபக்ச பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காகவே அவர் இவ்வாறு அழைக்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பாக கோட்டாபய ராஜபக்சவிற்கு கடந்த 06ம் திகதி எழுத்துபூர்வ அறிவிப்பு அனுப்பப்பட்டிருந்தது. கொழும்புக்கு அருகில் அமைந்துள்ள ஒரு வீட்டுத் தொகுதிக்குச் சொந்தமான பல வீடுகளை பலருக்கு சட்டவிரோதமாக ஒதுக்கியதை அங்கீகரிக்கும் கடிதங்கள் வெளியிடப்பட்டமை தொடர்பில் அவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இதேவேளை கோட்டாபய ராஜபக்ச நேற்று அங்கு முன்னிலையாகாதமைக்கான காரணங்கள் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சுதந்திரமாக சிவராத்திரி தின வழிபாடுகளில் ஈடுபட இடமளிக்க வேண்டும்: ரவிகரன் எம்.பி வலியுறுத்தல்



வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, ஒலுமடு வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் சைவ மக்கள் சுதந்திரமாக சிவராத்திரி தின வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் சைவ மக்களின் வழிபாட்டுரிமை பாதுகாக்கப்படவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்ற நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

வெடுக்குநாறி மலையில் கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற சிவராத்திரி தின

தொடர்ச்சி: பக்கம் 08

## டித்வா புயலால் பாதிக்கப்பட்டவர்கள் மூதூரில் ஆர்ப்பாட்டம்!



டித்வா புயலால் அதிகளவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் நிவாரண கொடுப்பனவு வழங்கப்படும் என ஜனாதிபதி அறிவித்திருந்த போதிலும், அந்த கொடுப்பனவும் மூதூர் மக்களுக்கு முழுமையாக கிடைக்கவில்லை எனக் கூறி பொதுமக்கள் வெள்ளிக்கிழமை (13) மூதூர் பிரதேச செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர்.

ஏற்கனவே ரூ. 25,000 கொடுப்பனவு பெற்ற அனைவருக்கும் ரூ. 50,000 வழங்கப்பட தகுதியானவர்கள் என போராட்டக்காரர்கள் இதன்போது தெரிவித்தனர்.

மேலும், சிலருக்கு மட்டுமே ரூ. 50,000 வழங்கப்பட்டுள்ளதாகவும், பல தகுதியானவர்கள் இதுவரை அந்த நிவாரணத் தொகையை பெறவில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அண்மையில் நாட்டை தாக்கிய டித்வா புயல் காரணமாக மூதூர் பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மத்திய கிழக்கு முழுவதும் உள்ள அமெரிக்க தளங்களை தாக்குவோம் - ஈரான்



வாஷிங்டன் தனது அணுசக்தி திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியில் தெஹ்ரான் மீது இராணுவ அழுத்தத்தை தீவிரப்படுத்தி வருவதால், மத்திய கிழக்கில் போருக்கு தயாராகுமாறு அமெரிக்க போர்த் துறை இரண்டாவது விமானம் தாங்கி போர்க்கப்பல் தாக்குதல் குழுவிற்கு அறிவுறுத்தியுள்ளதாக வால் ஸ்ட்ரீட் ஜர்னல் கடந்த புதன்கிழமை(11) தெரிவித்துள்ளது.

ராஜதந்திர முயற்சிகள் தோல்வியடைந்தால் ஈரான் மீது சாத்தியமான தாக்குதலுக்கான தற்செயல் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த ஏற்பாடுகள் இருப்பதாக மூன்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இன்னும் உத்தரவை பிறப்பிக்கவில்லை, பென்டகன் சுமார் இரண்டு வாரங்களுக்குள் நிலைநிறுத்த யுஎஸ்எஸ் ஜார்ஜ் எச்.டபிள்யூ. புஷ் என்ற விமானம் தாங்கி போர்க்கப்பலை தயார் செய்து வருவதாகவும், இது அமெரிக்காவின் கிழக்கு கடற்கரையிலிருந்து சாத்தியமாகும் என்றும் மேலும் திட்டங்கள் மாறக்கூடும் என்றும் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். இரண்டாவது விமானக் கப்பல் USS ஆபிரகாம் லிங்கனுடன் இணைந்தால், இது ஏற்கனவே கூடுதல் போர்க்கப்பல்கள், வான் பாதுகாப்பு மற்றும் போர் படைகளை உள்ளடக்கிய பரந்த அமெரிக்க இராணுவக் கட்டமைபை மேலும் வலுப்படுத்தும்.

ஈரானுடனான பேச்சுவார்த்தைகள் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்துமா இல்லையா என்பதைப் தொடர்ச்சி: பக்கம் 08

## சவுதியிடம் அணு ஆயுதங்கள் - ஈரான் எச்சரிக்கை



சவுதி அரேபியா அணு ஆயுதங்களைக் கொண்டுள்ளது, அமெரிக்காவும் அதை முழுமையாக அறிந்திருக்கிறது என்று ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படையின் (IRGC) முன்னாள் தளபதி ஹூசைன் கனானி இந்த வாரம் ஊடகம் ஒன்றிற்கு அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

ஈரான் அணு ஆயுதங்களை உருவாக்குவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக வாஷிங்டனுக்கும் தெஹ்ரானுக்கும் இடையே மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில், ஒரு பிரத்தியேக நேர்காணலில் போது உளவுத்துறையை மேற்கோள் காட்டி இந்த அதிர்ச்சியூட்டும் தகவல் வெளிவந்துள்ளது.

இந்த நேரத்தில், சவுதி அரேபியாவிடம் அணு குண்டு உள்ளது மற்றும் அதை இஸ்ரேலும் அமெரிக்காவும் முழுமையாக அறிந்திருக்கின்றன. ஈரானில் அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்களை இஸ்ரேலின் மொசாட் மற்றும் CIA உள்ளிட்ட வெளிநாட்டு

தொடர்ச்சி: பக்கம் 08


## ஐ.நா பாதுகாப்பு சபையில் இந்தியா - சீனா ஆதரவு



ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் (UNSC) நிரந்தர உறுப்பினர் பதவிக்கான இந்தியாவின் விருப்பத்தை சீனா “மதிக்கிறது மற்றும் புரிந்துகொள்கிறது” என்று பெய்ஜிங்கின் நிலைப்பாட்டை துணை வெளியுறவு அமைச்சர் மா சாவோக்சு கடந்த புதன் கிழமை(11) தெரிவித்துள்ளார்.

பிரிக்ஸ் ஷெர்பா கூட்டத்தில் பங்கேற்க இந்தியா வந்திருந்த மாவுடன் இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி இந்தியா-சீனா மூலோபாய உரையாடலை நடத்திய பின்னர் “இந்தியாவில் வெற்றிகரமான பிரிக்ஸ் உச்சி மாநாட்டிற்கு சீனத் தரப்பு தனது ஆதரவைத் தெரிவித்தது” துணை அமைச்சர் மாஸ UNSC உறுப்பினர் பதவிக்கான இந்தியாவின் விருப்பத்தை சீனா புரிந்துகொண்டு மதிக்கிறது என்று தெரிவித்துள்ளார். தொடர்ச்சி: பக்கம் 08

## $11 பில்லியனை இழந்த அமெரிக்க மோட்டார் நிறுவனம்




அமெரிக்காவின் ஃபோர்டு மோட்டார் நிறுவனம் தனது மின்சார வாகனப் பிரிவு 2025 ஆம் ஆண்டில் $4.8 பில்லியன் இழப்பைச் சந்தித்ததாகவும், மேலும் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு தொடர்ந்து பணத்தை இழக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளது. பரந்த வணிக நெருக்கடிகள் அமெரிக்க வாகன உற் தொடர்ச்சி: பக்கம் 14

# இலவு காத்த கிளி நிலைமையில் தமிழ்த்தேசிய கட்சிகள்

**பா.அரியநேத்திரன்**

2024 நவம்பர் 14 பொதுத் தேர்தல் இடம்பெற்று 159 அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது 15 மாதங்கள் கடந்தும் மாகாணசபை தேர்தலை நடத்தாமல் சாக்கு போக்கு கூறி இழுத்தடித்து செயல்படுகிறது.



ஏற்கனவே 2024 செப்டம்பர் 21 ல் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் தற்போதைய ஜனாதிபதி அநுரா கொடுத்த வாக்குறுதிகளில் மாகாணசபை தேர்தலை தாம் ஆட்சியமைத்து ஒரு வருடத்திற்குள் நடத்துவோம் என்றார். இப்போது மாகாணசபை தேர்தலை பிற்போட காரணத்தைத் தேடும் அரசாங்கமாக தேசிய மக்கள் சக்தி உள்ளது.

ஆனால் என்றுமில்லாதவாறு சிங்கள எதிர்கட்சிகளாக உள்ள ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன, ஶ்ரீலங்கா சுதந்திர கட்சி, மலையக கட்சிகள், முஸ்லிம் கட்சிகள் எல்லாம் மாகாணசபை தேர்தலை நடத்துமாறு தொடர் அழுத்தங்களை அரசுக்கு கூறி சவால் விடும் நிலை தொடர்கிறது.

சிங்கள கட்சிகளுக்கு இருக்கிற பிரச்சினை மாகாணசபை தேர்தல் அதிகாரப்பகிர்வுக்கான கோரிக்கை இல்லை தமது செல்வாக்கை தேர்தல் மூலம் பரீட்சித்து பார்க்கவே அவர்களுக்கு மாகாணசபை தேர்தல் தேவைப்படுகிறது.

தமிழ்தேசிய கட்சிகளுக்கும் அதிகாரப் பகிர்வு அவசியம் அதற்காக மாகாணசபை தேர்தலை நடத்துமாறு வெளியில் கூறினாலும் உண்மையில் அவர்களும் கதிரை ஆசை, முதலமைச்சர் ஆசை, பதவி ஆசை என்பதுவே மூல காரணமாகும்.

இப்போது வெளிநாட்டில் இருந்து எந்த இராஜதந்திரிகள் வந்தாலும் ஓட்டம் ஓட்டமாக அவர்களை சந்தித்து படம் எடுத்து ஊடகங்களுக்கு கொடுக்கும் தலைப்பு செய்திகள் மாகாணசபைத் தேர்தலை நடத்த அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் கோரிக்கைகள் மட்டுமே.

கடந்த 10/02/2026 ல் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளை சந்தித்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பதவிகளை தக்க வைத்துள்ள இருவர் (சுமந்திரன், சாணக்கியன்) மாகாணசபையை உடனே நடத்த இலங்கை அரசை நிர்ப்பந்திக்கும் கோரிக்கையினை முன்வைத்தனர்.

1949 தொடக்கம் 1976 வரையும் சமஷ்டி கேட்டு அகிம்சை போராட்டம் செய்த இனம். 1976 தொடக்கம் 2010 வரையும் தமிழீழம் கேட்டு ஆயுதப்போராட்டம் செய்த இனம். 2010 தொடக்கம் 2025 வரையும் இனப்படுகொலைக்காக சர்வதேச நீதி கேட்டு போராடிய இனம். 2026 ல் மாகாணசபை தேர்தலை நடத்த இலங்கை அரசை நிர்ப்பந்திக்க சர்வதேச இராஜதந்திரிகளை நாடவேண்டிய நிலை.

2017ல் நல்லாட்சியில் எதிர்கட்சியாக, எதிர்கட்சி தலைவராக தமிழ்தேசிய கூட்டமைப்பு செயல்பட்டு ஆளும் தரப்புக்கு ஆதரவு கொடுத்து இணக்கப்பாட்டு அரசியல் செய்த வேளையில் மாகாண சபை திருத்த சட்ட மூலம் மாகாணசபை தேர்தலுக்கு ஆப்பு வைக்கப்பட்டது.

இதனை அப்போது நீதி அமைச்சராக இருந்த விஜயதாச ராஷபக்ஷ கடந்த வாரம் (10/02/2026) இப்படி தெளிவாக கூறியிருந்தார். “மாகாணசபை தேர்தல் முறையில் மாற்றம் அடைந்து மாகாணசபை தேர்தல் தாமதம் அடைவதற்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வழங்கி இருந்தன”. இது உண்மை 2017 ல் அந்த சட்டமூலத்தை எதிர்த்து அதனை நிறுத்தக் கூடிய பலம் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு இருந் தது அதனை செய்யவில்லை.

இப்போது மாகாணசபை தேர்தலை நடத்துங்கள் என கொக்கரிக்கும் எதிர்கட்சிகளான, ஐக்கியதேசிய கட்சி, பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, என்பன 2017 ல் வாய்மூடி மௌனமாக இருந்தவர்கள் இப்போது மாகாணசபை தேர்தலை முடிந்தால் நடத்துங்கள் என சவால் விடுகிறார்கள். அவர்கள் அதிகாரப்பரவாலக்கத்துக்காக அல்ல தமது செல்வாக்கை இந்த தேர்தலில் தக்க வைப்பதற்காகவே.

ஈழத்தமிழர் மக்களின் பரிதாப அரசியல் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் பயங்கரவாத சட்டத்தை நீக்குமாறோ..? தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறோ..? சர்வதேச நீதி தேவை என வலியுறுத்தாமலோ.? பௌத்தமயமாக்கல், தொல்பொருள், காணி விடுவிப்பு பற்றி விடயங்களைபற்றியோ.? காணாமால் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான சர்வதேச நீதிபற்றியோ..?

இப்படியான விடயங்களை விட மாகாணசபை தேர்தலை

**தொடர்ச்சி: பக்கம் 08**

## ஆசிரியர் தலையங்கம் | 14 பெப்ரவரி, 2026

# ‘மூலோபாய ஒற்றுமை’ உடன் செயற்பட்டு ஈழத்தமிழர் இறைமையை மீள் நிறுவ வேண்டிய நேரமிது

உண்மைக்கும் மீள்நல்லிணக்கத்திற்குமான முயற்சி என்பது சமூகத்திடையிருந்தும் அரசாங்கத்திடை இருந்தும் எழவேண்டிய முயற்சி எனவும் அப்படி ஒரு முயற்சிக்குத்தான் பிறநாடுகளால் உதவ முடியுமென்று சிறிலங்காவுக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் மத்தேவ் டக்வேர்த் அவர்கள் பாத்பைண்டர் (வழி கண்டறியும்) அமைப்பினர் தாஜ் சமுத்ரா ஹோட்டலில் அவருடன் நடத்திய வட்டமேசை மாநாட்டில் இந்த மிக முக்கியமான உண்மையினை உறுதியுடன் தெரிவித்தமைக்கு இலக்கு அவருக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்க விரும்புகிறது. சிறிலங்கா கேட்டால் உதவ அவுஸ்திரேலியா தயாராக உள்ளதாகக் கூறிய அவஸ்திரேலியத் தூதுவர் சிறிலங்காவின் இன்றைய ஆட்சியாளர்கள் அளித்துள்ள சில அறிக்கைகள் அவுஸ்திரேலியாவுக்கு மிகுந்த ஊக்கமளித்திருப்பதாகவும் கூறியிருப்பது ஈழத்தமிழர்களால் கவனமாகக் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளதென்பதை இலக்கு இவ்வாரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

அதாவது சிறிலங்கா அரசாங்கத்தில் தங்கள் நாடுகளுக்கான தூதுவர்களாக உள்ள எவரும் சிறிலங்கா என்ற அரசையே இலங்கைத் தீவின் ஒரே இறைமையாளராக ஏற்றுச் சிறிலங்காவினுடைய ஒருமைப்பாட்டுக்கும் வளர்ச்சிகளுக்கும் தம்மாலான அனைத்து உதவிகளையும் செய்து சிறிலங்காவைத் தெற்கு உலகில் வலிமையுள்ள அரசாக நிலைநிறுத்தும் நோக்கிலேயே செயற்படுவர் என்பது வெளிப்படையான நடைமுறை உண்மையாக உள்ளது. இவை ஈழத்தமிழர்களுக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொண்டு வர முயலும் ஏக்கிய இராச்சிய அரசியலமைப்பை அது தான் நினைத்த மாதிரியே கொண்டு வரக்கூடிய ஈழத்தமிழர் தேசிய அபாயத்தை உருவாக்கியுள்ளது.

இந்நேரத்தில் சிறிலங்காவின் அரசியலமைப்பு அதன் மக்கள் என்று சிறிலங்காவின் குடிகள் என்ற வகையில் ஈழத்தமிழர்களை உள்ளடக்கியிருக்கும் இன்றைய நிலையையும் கூட இல்லாதொழித்து மொழிக் கூட்டத்தினர் மதக்கூட்டத்தினர் என்ற முறையில் ஈழத்தமிழரின் இறைமை நீக்கத்தையும் தேசிய நீக்கத்தையும் செய்கின்ற பொழுது இதுவரை சிறிலங்காவின் உயர் நீதிமன்றம் அதன் குடிகள் என்ற வகையில் ஈழத்தமிழர்களுக்கு உள்ளக தன்னாட்சி உரிமையுண்டு என்றும் கூட்டாட்சி கோரப்படலாம் என்றும் அதனது தீர்ப்புக்களில் அளித்த விளக்கங்களைக் கூட இனி அளிக்க இயலாது ஈழத்தமிழர்கள் சிங்கள பௌத்த நாட்டில் வாழும் கூட்டத்தினர் என்ற அபாயகரமான தேசிய நெருக்கடிக்குள் தள்ளப்படப் போகின்றார்கள். இதற்கு ஆதரவு அளிக்கக் கூடிய முறையில் தமிழரசுக்கட்சி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் 15ம் திகதி அரசியலமைப்பு ஈழத்தமிழர்களின் தன்னாட்சி உரிமையுடன் கூடிய கூட்டாட்சியை வலியுறுத்தி நடாத்தும் எழுச்சிப் பேரணியிலும் கலந்து கொள்ள மறுத்துள்ளனர். இந்நிலையில் இலக்கு ஈழத்தமிழர்கள் “மூலேபாய ஒற்றுமை” யுடன் ஏக்கிய இராச்சியத்தை மட்டுமல்ல ஈழத்தமிழர்களின் இறைமை நீக்கத்தையும் தேசிய நீக்கத்தையும் முன்னெடுக்கக் கூடிய எல்லா அறியாமைகளையும் எதிர்க்கக் கூடிய வகையில் அவர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் அனைத்துலக மாநாடுகளை நடத்துவதற்கான செயற்பாடுகளில் இறங்க வேண்டிய நேரம் இது என்பதே இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது. இந்த மாநாடுகளை ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிக்கைகள் தயாரிக்கும் முறைக்கு ஏற்ப அதில் வல்லுனர்களான உலக அறிஞர்களுடன் இணைந்து செயற்பட்டு சக்தி மிக்க வகையில் அவற்றை நடத்த வேண்டுமென்பதே இலக்கின் வேண்டுகோளாக உள்ளது.

ஏனெனில் இன்றைய உலக மாற்றங்கள் இதனை சமகாலத்தின் தேவையாக்குகின்றது. இதனை உறுதி செய்யக் கூடிய முறையில் தெற்கு ஆசிய மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் வெளியுறவு உதவிச் செயலாளர் பால் கபூர் அவர்கள் அமெரிக்காவுக்கு முதலிடம் என்னும் அமெரிக்க அரசத்தலைவரின் சமகாலக் கொள்கையானது அமெரிக்காவுக்கு மட்டும் என்று பொருள்படாது எமது இலக்குகளை அடையச் சுமைகளைப் பகிர்ந்து கொள்ளக் கூடிய ஒத்த எண்ணம் கொண்ட பங்காளிகளுடன் ஒத்துழைக்க வேண்டும் என்பதையும் குறிக்கும் என்று விளக்கம் அளித்து விட்டு இந்தியாப் பிரதமர் மோடி அவர்கள் அண்மையில் வரலாற்றுச் சிறப்புமிக்க வர்த்தக ஒப்பந்தத்தைச் செய்துள்ளார் எனப் பாராட்டியுள்ளார். கூடவே அமெரிக்கா பங்களாதேசுடன் அண்மையில் பங்களாதேசின் 175 மில்லியன் மக்களுக்கு அமெரிக்கச் சந்தையைத் திறந்து விடக்கூடிய முறையில் செய்து கொண்ட ஒப்பந்தத்தையும் அமெரிக்காவின் சுமையைச் சுமக்க ஒத்த மனத்தினருடனான அமெரிக்காவின் பங்காண்மைக்கான உதாரணமாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதே வேளையில் யேர்மனியின் முனிச்சில் நடைபெறும் உலகப் பாதுகாப்பு குறித்த மாநாட்டில் யேர்மனின் சான்சிலர் மேர்ஸ் அமெரிக்கா தனியாக இன்றைய உலகில் செல்வதற்கான சக்தியைக் கொண்டிருக்கவில்லையென்றும் இன்றைய உலகு முன்பு இருந்த அனைத்துலக அரசியல் ஒழுங்குமுறையை இழந்து விட்டது எனவும் இந்நிலையில் கலாச்சார போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது எனவும் மனித மாண்புக்கும் அடிப்படையான சட்டங்களுக்கும் எதிரானவைகள் நடைபெறுவதால் இன்று இங்கு கருத்துச் சுதந்திரம் முடிவுக்கு வருகிறதெனவும வரிவிதிப்புக்களிலும் தற்பாதுகாப்புப் பொருளாதாரங்களிலும் நாம் நம்பிக்கை வைக்காது சுதந்திர வர்த்தகத்தையே முன்னெடுக்க வேண்டுமெனவும் காலநிலையைச் சீர்படுத்துவதிலும் உலக சுகாதாரத்தைப் பேணுவதிலும் கவனம் செலுத்த வேண்டுமெனவும், பெருவலல்லரசுக்களின் காலத்தில் எங்களின் சுதந்திரம் அல்ல அச்சுறுத்தல்களே ஏற்பட்டுள்ளன எனவும் சர்வாதிகாரம் பின்பற்றுபவர்களையே உருவாக்கும் எனவும் சனநாயகம் தான் பங்காண்மைகளையும் கூட்டாண்மைகளையும் உருவாக்கும் எனவும் நேட்டோவைத் தாங்கள் தள்ளவில்லை காலத்துக்கேற்ற பழுதுபார்த்தல்கள் தேவை எனவும் நேட்டோ ஐரோப்பாவின் தூணாக எழக்கூடிய வகையில் ஐரோப்பிய நாடுகள் தங்களுக்கான பாதுகாப்பை கட்டியெழுப்ப வேண்டும் எனவும் உரையாற்றினார். பிரான்சிய அரசத்தலைர் மக்ரோனும் ஐரோப்பாவை உலகின் அரசியல் சக்தியாகக் கட்டியெழுப்ப வேண்டுமெனவும் இதற்குத் தடையாக உள்ளவற்றை விளக்கி அவற்றை எல்லாம் ஐரோப்பியர்கள் ஒன்றுபட்டு நீக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

தேசிய மக்கள் சக்தியின் சிறிலங்காவின் அரசத்தலைவர் அநுரகுமாரதிசநாயக்காவின் அமெரிக்கப் பயணத்தின் பொழுது செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த விபரங்கள் இன்றளவும் பாதுகாப்பாகவே உள்ளன. இதற்கிடை இந்தியாவுடன் சிறிலங்காவின் இன்றைய ஆட்சியாளர்கள் செய்துகொண்ட உடன்படிக்கைகள் குறித்து சிறிலங்காவின் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் சிறிலங்கா அமைச்சருமான விமல் வீரவன்ச “ கொழும்பில் கட்சிக் காரியாலயத்தில் 12.02.2026.ல் நடாத்திய கூட்டத்தில் “இலங்கையின் மேற்பரப்பு மற்றும் கடல் தளத்தில் உள்ள அரிய கனிம வளங்களை வரைபடமாக்குதல் அடையாளம் காணுதல் மற்றும் வெட்டியெடுப்பதை இந்திய நிறுவனங்களுக்கு ஒப்படைக்க இந்த ஒப்பந்தம் திட்டமிட்டுள்ளது.

இரு அரசுக்களின் ஒப்பந்தம் மூலம் கனிமமயமாக்கப்பட்ட பகுதிகளை இந்திய நிறுவனங்களுக்கு ஒதுக்கவும் இந்தியப் பொது மற்றும் தனியார் துறைகளின் முதலீடுகளை ஊக்குவிக்கவும் திட்டமிட்டுள்ளது. சிலோன் கிராஃபைட், நீல சபையர், புல்மோட்டைக் கனிம வளங்களான இல்மனைட், ரூட்டைல், சிர்கான், மோனசைட் உயர்தர சிலிக்கா ராக் பாஸ்பேட், டோலமைட் மற்றும் கடலுக்கடியில் உள்ள கோபால்ட் படிவுகள் போன்ற வளங்களை இந்த ஒப்பந்தங்கள் மூலம் கையகப்படுத்தும் அபாயம் உள்ளது. காங்கேசன்துறைமுகம், திருகோணமலைத் துறைமுகம் என்பன இந்தியமயமாக்கப்படும். மருந்துச் சந்தையை இந்திய மருந்துகளால் நிரப்பல் என்பன நடைபெறக்கூடிய ஏழு இரகசிய ஒப்பந்தங்கள் உள்ளன. இவற்றுக்கு எதிராக நாட்டு மக்கள் ஒன்றிணைந்து போராட வேண்டுமென்று அழைப்பு விடுத்துள்ளார். இதே போன்ற ஒரு அழைப்பை குருணாகலில் இருந்து சிறிலங்காப் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறிசேகரவும் விடுத்துள்ளதுடன் மட்டக்களப்பிலும் கனிம வளங்களை இந்தியர்கள் அகழ்வதற்கான வசதியை இந்த ஏழு ஒப்பந்தங்களும் செய்துள்ளன எனவும் ஆனால் இந்த ஒப்பந்தங்கள் குறித்து இந்தியாவின் அனுமதியின்றி எழுத்து வடிவில் சிறிலங்காவால் வெளியிட முடியாது எனவும் தனது அழைப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவைகள் எல்லாம் இன்றைய சூழலில் உலக வல்லாண்மைகளும் பிராந்திய மேலாண்மைகளும் ஈழத்தமிழர்களின் தேசிய பிரச்சினை நீர்த்துப்போகக் கூடிய முறையிலேயே சிறிலங்கா செயற்படுவதற்கான சந்தர்ப்பங்களையே அளிக்கின்றன இந்த இடத்தில்தான் ஈழத்தமிழர்கள் தங்கள் இறைமையை மீளுறுதி செய்வதற்கு மூலோபாய ஒற்றுமையினை (Strategic Unity) வெளிப்படுத்த உடன் செயலாற்ற வேண்டுமென இலக்கு இவ்வாரத்தில் ஒவ்வொரு ஈழத்தமிழரின் அரசியல் கட்சிகளையும் அமைப்புக்களையும் நிறுவனங்களையும் இயக்கங்களையும் வேண்டி நிற்கிறது. கூடவே அனைத்துலக அரசியல்வாதிகளை நெறிப்படுத்தக் கூடிய அவர்களின் நிகழ்ச்சிகளை மற்றும் கொள்கை வகுப்புக்களைச் செய்கின்ற அனைத்துலக முகவர்கள் உடன் தொடர்பு கொண்டு உரியமுறையில் அனைத்துலக அரசியல் தளத்தைச் சந்திக்கத் தக்க வகையில் எதிர் வினைகளைச் செய்ய வேண்டும் என்பது இலக்கின் வேண்டுகோளாக உள்ளது. 13.02.2026 இல் இங்கிலாந்தில் பலஸ்தீன செயற்பாட்டாளர்களின் இந்த மூலேபாய ஒற்றுமையுடனான செயற்பாடு பிரித்தானியா அந்த இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் என வகைப்படுத்தியதை பிரித்தானிய உயர் நீதிமன்றம் சட்ட விரோதமானது எனத் தீர்ப்பளிக்கவைத்துள்ளது என்பதையும் இலக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறது.


**ஆசிரியர்**



# சுவிட்சர்லாந்து தூதரக தலையீடு தமிழ்த்தேசிய தார்மீகத் தோல்வி

பாலா

அண்மைய நாட்களாக தமிழர் அரசியல் அரங்கில் பேசுபொருளாகியுள்ள விடயம் இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதரகம் முன்னெடுத்த தமிழ்க் கட்சிகளை ஒரு தளத்தில் கொண்டுவருவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி தான்.



குறிப்பாக,தமிழ்த் தேசியத் தளத்தில் உள்ள கட்சிகள் எனப்படுகின்ற இலங்கைத் தமிழரசுக்கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய தரப்புக்களை ஒன்றிணைத்து பொதுநிலைப்பாட்டை எட்ட வைப்பது தான் அந்த முயற்சியின் இலக்காக உள்ளது. அப்படிப் பார்க்கையில் இதுவொரு நல்ல விடயம் தானே. ஏனென்றால் புலம்பெயர் அமைப்புக்களும் சரி, தாயகத்தில் உள்ள சிவில் அமைப்புக்களும் சரி மேற்படி மும்மூர்த்திகளையும் ஒருதளத்தில் கொண்டுவருவதற்கு எடுத்த முயற்சிகள் கையறு நிலையை அடைந்துவிட்டன.

சுவிட்சர்லாந்து பொதுவானதொரு நாடு என்ற அடிப்படையில் அந்நாட்டின் தூதரகம் எடுத்துள்ள முயற்சி வரவேற்கத்தக்கது தான். பிறகென்ன உடனடியாக அந்த முயற்சிளை வெற்றிபெறச் செய்வதற்கான அழுத்தங்களை அளித்து விடலாம் தானே என்று பலரும் சிந்திக்கலாம்.

ஆனால் விடயத்தினை சற்று ஆழமாக தேடிப் பார்க்கின்றபோது வெளிக்கிளம்பும் விடயங்கள் மெல்ல மெல்ல சந்தேகங்களையும் அச்சங்களையும் ஏற்படுத்துவ தாக உள்ளன. அத்துடன் சுவிட்சர்லாந்தின் 'நடுநிலை' தொடர்பிலும் கேள்விகளை தொடுக்க வைக்கின்றது.



தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னரான புதிய அரசியல் சூழலில், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அனைத்து தமிழ் கட்சிகளாலும் ஏற்றுக்கொண்ட ஏக வரைபடமாக மாற்றுவதற்குத் அவற்றை ஒரு மேசைக்குக் கொண்டுவர வேண்டியது அவசியம் தான். அந்த நிலைப்பாட்டில் தான் எதிர்வரும் பெப்ரவரி 19 ஆம் திகதி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆகியவற்றுக்கு இடையே முக்கியதொரு சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த சந்திப்பு பற்றி கொழும்பிலிருந்து வெளி யாகும் தேசிய தமிழ் பத்திரிகை முதலில் செய்தி வெளி யிட்டது. ஆனால் இந்த முயற்சி தொடக்கத்திலேயே முடங்கியிருக்கிறது. இந்த முயற்சி முடங்கியமைக்கு பத்திரிகை செய்தி தான் காரணம் என்று முதலில் கூறப்பட்டது.

ஆனால் அடுத்த இருபத்து நான்கு மணிநேரத்துக் குள் குறித்த முயற்சி சீர்குலைந்ததற்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியே காரணம் என்று கூறப்டுகின்றது. இதற்குள் சுமந்திரனின் வகிபாகம் இருப்பதாக மற்றொரு பக்கம் சொல்லப்படுகின்றது.

ஆனால் இந்த முரண்பாட்டின் பின்னணியில் சுவாரசியமான 'அரசியல் சதுரங்கம்' ஒளிந்துள்ளது. சுவிட் சர்லாந்தின் சந்திப்புக்கு முன்னதாக, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அனைத்துத் தமிழ் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளை யாழ்ப்பாணத்தில் ஒரு சந்திப்புக்கு அழைத்திருந்தது.

இந்தச்சந்திப்பு நாளை 15ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற இருக்கிறது. இந்தச் சந்திப்பை ஒரு 'காரணமாகக் காண்பித்து', சுமந்திரன் தரப்பு சுவிஸ்சர்லாந்து தூதரகக் கூட்டத்தை நிறுத்துமாறு கோரியதாகத் தான் சொல்லப்படுகிறது.



அந்த வகையில் சுவிட்சர்லாந்து தமிழ்க் கட்சி களை ஒருதளத்துக்கு கொண்டுவரும் விடயத்தில் கள மிறக்குவதற்கு காரணம், சுமந்திரனும், சத்தியலிங்கமும் தான். பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று கடந்த ஆண்டு செப்டெம்பர் 18ஆம் திகதி சுவிட்சர்லாந்துக்குச் சென்றிருந்தது

இந்தக்குழுவில் ஆளும் எதிர் அணிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்ததோடு சத்தியலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்டவர்களும் உள்ளடங்கியிருந்தனர். குறித்த குழுவானது, சுவிட்சர்லாந்தில் கூட்டாட்சி தத்துவங்கள் உள்ளிட்ட விடயங்கள் பற்றிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவே சென்றிருந்தார்கள்.

இதன்பின்னணியில், குறித்த விஜயத்தில் பங்கேற் றிருந்த சத்தியலிங்கம் கஜேந்திரகுமாருடன் பல்வேறு சந்திப்புக்களை அந்த விஜயத்தினுள்ளே நடத்தியிருந்த நிலையில் நாடு திரும்பியதும் அனைத்து தரப்பினையும் ஒன்றிணைக்கும் செயற்பாட்டுக்கு உயிர்கொடுக்கும் வகையில் கஜேந்திரகுமாரை உள்ளீர்ப்பதற்கு சுவிட்சர்லாந்து தலைமையில் நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

அதற்கமைய ஏற்பாடுகள் சுவிட்சர்லாந்தின் தரப் பிலிருந்து தடாலடியாக நடைபெற்றன. அதன்படி, இலங் கைத் தமிழரசுக்கட்சியின் சார்பில் பதில் தலைவர் சி.வி. கே.சிவஞானம், பதில் பொதுச்செயலாளர் சுமந்திரன், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரனும் பிறிதொருவரும், தமிழ்த் தேசிய மக்கள் மன்னணியின் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் பிறிதொருவரும் பங்கேற்பதாக இருந்தது.

எனினும் குறித்த பட்டியலுக்குள் சிவஞானம் சிறிதரன், கலாநிதி.குமாரவடிவேல் குமரகுருபரன் ஆகியோ ரும் உட்புகுத்தப்பட்டனர். இரண்டுமே சுவிட்சர்லாந்தின் தனிப்பட்ட விருப்பில் உட்புகுத்தப்பட்ட பெயர்கள் என்று கூறப்படுகின்றது.



ஆனால் மறுபக்கத்தில் குறித்த பெயர்களை உள்ளீர்ப்பதில் கஜேந்திரகுமாரின் 'கை' ஓங்கியிருந்ததாகவும் சொல்லப்படுகின்றது. ஏனென்றால் குறித்த சந்திப்பு தமிழரசுக்கட்சியின்கோரிக்கையில்தான்நடைபெறுகின்றது என்பதை கஜேந்திரகுமார் அறிந்திருந்தார்.

அவ்வாறான நிலையில் பேச்சு மேசைக்குச் சென்றதும் சிலவேளைகளில் சுவிட்சர்லாந்து தூதுவர் சிறிவோல்ட் எந்த அடிப்படையில் அரசியல் தீர்வு விடயத்தில் இணைந்து செயற்படப்போகின்றீர்கள் என்று கேள்வி எழுப்பினால் அதற்கு சுமந்திரன் உடனடியாகவே 2016-2018ஆம் ஆண்டு வரையில் புதிய அரசியலமைபபை உருவாக்குவதற்காக தயாரிக்கப்பட்ட 'இடைக்கால அறிக்கை' உள்ளது என்று பதிலளிப்பார்.

ஆனால் கஜேந்திரகுமாரைப் பொறுத்தவரையில் இடைக்கால அறிக்கையை அவர் முழுமையாக நிராகரிக் கிறார். அது ஒற்றையாட்சியை மையப்படுத்திய ஏக்கிய இராச்சிய இடைக்கால அறிக்கை என்றும் பெயர்பலகையின் பெயரால் கண்ணைப் பொத்தி அடிக்கும் விளையாட்டு என்றும் விமர்சிக்கிறார். ஆனால் அதனை தூதுவரிடத்தில் அச்சமயத்தில் அவரால் சொல்லமுடியாத தர்மசங்கட நிலைமை இருக்கலாம்.



ஆகவே தூதுவர் முன்னிலையில் அவர் ஜனநாயக அடிப்படையில் அந்தநிரகாரிப்பை காண்பிப்பதாக இருந் தால் தன்னோடு சிலரும் அவசியமாகின்றது. அந்த அடிப்பையில் சிறீதரன் எம்பியும் குமாரவடிவேல் குருபரனும் உள்ளீர்க்கப்பட்டிருக்கலாம்.

அதுவொருபுறமிருக்கையில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 15ஆம் பொதுக்கூட்டம் நடத்துவதற்கான

தொடர்ச்சி: பக்கம் 13



# இந்திய பால் உற்பத்தியை பார்வையிட்ட ரில்வின் சில்வா

# மட்டக்களப்பு மேய்ச்சல் தரைகளை மீட்டுத்தர வேண்டும்..!

— பா.அரியநேத்திரன்

ஜேவிபி பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தலைமையிலான குழுவினர், இலங்கையின் பால் உற்பத்தியை அதிகரிக்கவும், நவீன தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளவும் தமது இந்தியா பயணத்தில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இந்தியாவின் பால் பண்ணை மேலாண்மை, தரமான இனக் காளைகள் மற்றும் மேம்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளைப் பார்வையிட்டு, அந்நாட்டு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதில் அவர்கள் முக்கிய அக்கறை காட்டி வருகின்றனர்.



இலங்கையில் பால் உற்பத்தியில் மட்டக்களப்பு மாவட்டமும் அதிக பங்களிப்புகளை செய்கிறது. பால் சேகரிப்பு நிலையத்திற்கு குறைந்தது 500 தொடக்கம் 600 லீட்டர் பால் பெறப்படுகிறது .



ஏறக்குறைய மூன்று இலட்சம் பசு மற்றும் எருமை மாடுகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளன. இந்த மாடுகள் மேய்வதற்கான மேய்ச்சல் தரைகளாக மயிலத்தமடு மற்றும் மாதவணை போன்றவை மட்டக்களப்பின் முக்கிய பாரம்பரிய மேய்ச்சல் நிலங்களாகும்.

அந்த இடங்கள் வெளிமாவட்ட சிங்களவர்களை குடியேற்றம் செய்து நில ஆக்கிரமிப்பு தொடர்வதால் பண்ணையாளர்கள் அதனை தடுக்க தொடர்ச்சியான போராட்டங்களை செய்தபோதும் இதுவரை தடுக்க முடியவில்லை.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு பால் உற்பத்தியை அதிகரிக்க அக்கறை காட்டும் அதே வேளை மேய்ச்சல் தரைகளில் திட்டமிட்ட குடியேற்றம் நில அபகரிப்புகளையும் தடுக்கவேண்டும்.

இந்திய பால் உற்பத்தி மற்றும் ரில்வின் சில்வா குழுவின் கவனம் இலங்கையின் உள்ளூர் பால் உற்பத்தியை மேம்படுத்தவும், நவீன தொழில்நுட்பம் மற்றும் கால்நடை வளர்ப்பு முறைகளை இ ந் தி ய ா வி லி ரு ந் து கற்றுக்கொள்ள வும் இந்த பயணத்தின் போது கவனம் எடுக்கப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியை அதிகரிக்க பாகிஸ்தானின் சாஹி வால் இனக் காளைகளை இலங்கைக்கு கொண்டு வருவது குறித்து ரில்வின் சில்வா குழுவினர் கவனம் செலுத்துகின்றனர். இந்தியாவின் முன்னணி பால் பண்ணை மேலாண்மை, சுகாதாரமான கையாளுதல் நடைமுறைகள், மற்றும் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற நிலையான பால் உற்பத்தி அமைப்புகளைக் கண்டறிவதில் ஆர்வம் காட்டப்பட்டுள்ளது.



புது டெல்லிக்குச் சென்ற இந்தக் குழுவினர், இந்தியாவின் டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு, கலாசார உறவு கள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் குறித்து கல ந்துரையாடியுள்ளனர்.

இந்தியாவின் பால் உற்பத்தி முறைகளை, குறிப்பாக சிறிய அளவிலான பால் உற்பத்தியாளர்களையும் ஒருங்கிணைத்து, பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைவதை நோக்கமாகக் கொண்டு ரில்வின் சில்வாவின் தலைமையிலான குழுவின் இந்த விஜயம் அமைந்துள்ளது.



உலகின் முன்னணி பால் உற்பத்தியாளராக இந்தியா மாறுகிறது. வளர்ச்சி, சவால்கள், எதிர்கால இலக்குகள், இந்திய பால் உற்பத்தி 2025 உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தியாளர், ராஷ்ட்ரிய கோகுல் மிஷன், இந்திய பால் துறை மொத்த உள்நாட்டு உற்பத்தி, தனிநபர் பால் நுகர்வு இந்தியா, செயற்கை கருவூட்டல் பால் , உள்நாட்டு கால் நடை பாதுகாப்பு, காலநிலை மாற்ற பால் தாக்கம், பால் உள்கட்டமைப்பு இந்தியா உலகின் முதன்மை பால் உற்பத்தியாளர் என்ற நிலையை எட்டியது.

இந்தியா தற்போது உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தி நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது., உலகளாவியபால் உற்பத்தியில் 24% பங்களிப்பை அளிக்கிறது. 239 மில்லியன் மெட்ரிக் டொன் பால் உற்பத்தியை இந்தியா 2025ல் தொடர்ந்துள்ளது என மத்திய அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்தார். இது நாளொன்றுக்கு 471 கிராம் என்ற தலா பால் நுகர்வை அடைந்து, உலக சராசரியை விட அதிகமாக உள்ளது. அரசு தற்போது 2030க்குள் 300 மெட்ரிக டொன் பால் உற்பத்தி குறிக்கோளுடன் செயல்படுகிறது.

### தேசிய கோகுல் திட்டத்தின் தாக்கம்

2014இல் தொடங்கப்பட்ட தேசிய கோகுல் திட்டம், இந்திய பண்ணை பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியது. கிர், சாஹிவால், ரெட்சிந்தி போன்ற நாட்டுப்பாசி இனங்களை பாதுகாத்தல் மற்றும் செயற்கை விதை தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல் ஆகியவை மையக் கவனம் பெறுகின்றன. இது பால் தொழில் அடுக்குகள், குளிரூட்டும் கூடங்கள் மற்றும் கால்நடை மருத்துவ சேவைகள் போன்ற மூலதன கட்டமைப்புகளை உருவாக்கியுள்ளது. மொத்த பண்ணை

தொடர்ச்சி: பக்கம் 13




# கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் தொடர்ச்சியே “கிவுல் ஓயாத் திட்டம்”

**அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலி மற்றும் இலக்கு மின்னிதல் இணைந்து வழங்கும் தாயக களம்நிகழ்ச்சியில், மன்னார் மாவட்டத்தில் நடைபெற்று வரும் நில அபகரிப்பு முயற்சிகள் மற்றும் கிவுல் ஓயா திட்டத்தின் பின்னணி, அதன் அரசியல்-புவியியல் விளைவுகள் குறித்து, வடமாகாண காணி உரிமைக்கான மக்கள் அமைப்பின் தலைவர் முரளிதரன் ரத்னசிங்கம் அவர்களுடன் விரிவான உரையாடல்.**

**கேள்வி :**

**மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரிவில், குறிப்பாக செட்டியார் கட்டையடம் பகுதியில், பல தசாப் தங்களாக வாழ்ந்து வந்த தமிழ் குடும்பங்கள் தற்போது வெளியேற்றப்படுகின்றன என்று கூறப்படுகிறது. இந்த நில அபகரிப்பு முயற்சியின் பின்னணியை விளக்க முடியுமா?**

**பதில் :**

மன்னார் மாவட்டம், நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் வரும் செட்டியார் கட்டையடம் கிராமத்தில், 1963 ஆம் ஆண்டு முதல் ஒரு தமிழ் குடும்பம் குடியேறி வாழ்ந்து வருகிறது. இன்றைக்கு 63 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இரண்டு முதல் மூன்று தலைமுறைகள் அந்த நிலத்தில் வாழ்ந்து, வீடுகள் கட்டி, விவசாயம் செய்து, முழுமையான வாழ்வாதாரத்தை உருவாக்கியுள்ளனர்.

ஆனால் தற்போது 1954ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஒரு வர்த்தமானி அறிவிப்பை முன்வைத்து, அந்த நிலம் வனபாதுகாப்புத் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டதாக கூறி, அங்கு வசிக்கும் குடும்பங்களை உடனடியாக வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மூன்று மாத கால அவகாசம் வழங்கப்பட்டாலும், இத்தனை ஆண்டுகள் அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு, இப்போது திடீரென வெளியேற்ற முயற்சி மேற்கொள்வது நியாயமற்றது.

ஒரு நிலம் அரச காணியாக இருந்தாலும், அங்கு அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வரும் மக்களை மாற்று நிலம், இழப்பீடு அல்லது அடிப்படை வசதிகள் இன்றி வெளியேற்றுவது மனிதாபிமானத்திற்கும் சட்ட நியாயத்திற்கும் எதிரான செயல் ஆகும்.

**கேள்வி :**

**இலங்கையின் சட்டங்களில், நீண்ட காலம் ஒரு இடத்தில் வாழ்ந்தவர்களுக்கு உரிமை உள்ளதென்ற கோட்பாடு உள்ளதல்லவா? அது இங்கு பொருந்தாதா?**

**பதில் :**

இலங்கை சட்டத்தில், தனியார் காணிகளில் நீண்ட காலமாக இடையூறு இல்லாமல் வசித்து வந்தால், அதற்கான “உரிமைகோரல்” செய்யும் வாய்ப்பு உள்ளது. ஆனால் அரச காணிகளுக்கு அந்தச் சட்டம் நேரடியாகப் பொருந்தாது.

எனினும், ஒரு அரச காணியில் கூட, பல தலைமுறைகளாக மக்கள் வாழ்ந்து வந்திருந்தால், அவர்களை திடீரெனவெளியேற்றுவது சட்டரீதியாகவும் நெறிமுறையிலும் நியாயப்படுத்த முடியாது. குறைந்தபட்சமாக, மாற்று நிலம், குடியிருப்பு, வாழ்வாதார ஏற்பாடுகள் வழங்கப் பட வேண்டும் என்பதே எங்களது கோரிக்கையாகும்.

**கேள்வி :**

**இந்த நில அபகரிப்புகளுக்கு எதிராக அரசியல்வாதிகள் என்ன செய்கிறார்கள்?**

**பதில் :**

மன்னார் மாவட்டத்தில் பெருமளவு நிலங்களை கைப்பற்றியவர்கள் அரசியல்வாதிகளாகவே இருக்கிறார் கள். முன்னாள்அமைச்சர்கள், தற்போதைய நாடாளு மன்ற உறுப்பினர்கள் என பலர் நில அபகரிப்பில் தொடர்பு டையவர்களாக உள்ளனர்.

யுத்தம் முடிந்து 16 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், வடக்கு - கிழக்கில் இத்தனை நிலப் பிரச்சினைகள் இருந்தும், தமிழ் அரசியல்வாதிகள் பலர் மௌனமாக இருப்பது மிகவும் வேதனையானது. மக்கள் வாழ்ந்து வந்த நிலங்களை அரசு கைப்பற்றினாலும், அவர்களுக்கு உரிய மாற்று ஏற்பாடுகள் கிடைக்க வேண்டும் என்பதே அடிப்படை நியாயம்.


**கேள்வி :**

**கிவுல் ஓயா திட்டம் ஏன் ஒரு அரசியல் ஆபத்தாக பார்க்கப்படுகிறது?**

**பதில் :**

புவியியல் ரீதியாக, கிவுல் ஓயா திட்டம் பதவியா பகுதியிலிருந்து திருகோணமலை வரை நீள்கிறது. இந்தப் பகுதியில் சிங்கள குடியேற்றம் நடைபெறும்போது, வடக்கு கிழக்குக்கு இடையிலான நிலத் தொடர்ச்சி துண்டிக் கப்படுகிறது.


வடக்கு - கிழக்கு ஒரே நிலப்பரப்பாக இணைந் திருக்கக் கூடாது என்பதே இந்தத் திட்டத்தின் அடிப்படை உள்நோக்கம். இது திட்டமிட்ட இன அழிப்பின் ஒரு தொடர்ச்சியான வடிவமாகவே பார்க்கப்பட வேண்டும்.



**உயிரோடைத்தமிழ்வானொலிக்கு முரளிதரன் ரத்னசிங்கம் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின் றோம். இந்த நேர்காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

**கேள்வி :**

**மன்னாரைத் தவிர, இதுபோன்ற நில அபகரிப்பு கள் வேறு பகுதிகளிலும் நடைபெறுகிறதா?**



**பதில் :**

ஆம். இது மன்னாரில் மட்டும் நடைபெறும் ஒரு தனிப்பட்ட சம்பவம் அல்ல. வடக்கு - கிழக்கு முழுவதும், குறிப்பாக தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில், திட்டமிட்ட முறையில் நில அபகரிப்புகள் நடைபெற்று வருகின்றன.

இந்த தொடர்ச்சியின் மிக அபாயகரமான வடிவமே கிவுல் ஓயா திட்டம். இந்தத் திட்டத்தின் மூலம், ஏற்கனவே சுமார் 4,700 சிங்கள குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. மேலும் பல ஆயிரம் குடும்பங்களை குடியேற்றும் திட்டமும் உள்ளது.

**கேள்வி :**

**இந்தத் திட்டம் சமீப காலத்தில்தான் ஆரம்பிக் கப்பட்டதா?**

**பதில் :**

கிவுல் ஓயா திட்டம் 2011ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் அதிகாரபூர்வமாக முன்வைக்கப்பட்டது. ஆனால் இதன் அடிப்படை நோக்கம் அதற்கும் முன்னரே, மகாவலி திட்டம், பதவியா திட்டம் போன்றவற்றின் ஊடாக உருவாக்கப்பட்டது.

1948க்குப் பின்னர், குறிப்பாக ஜே.ஆர். ஜெயவர்தன காலம் முதல், வடக்கு - கிழக் கில் சிங்கள குடியேற்றம் திட்டமிட்டு முன் னெடுக்கப்பட்டது. கிவுல் ஓயா என்பது அந்த நீண்டகால திட்டத்தின் இன்னொரு கட்டமே.

**கேள்வி :**

**இந்தத் திட்டத்தால் சுற்றுச்சூழல் மற்றும் தொல்லியல் ரீதியான பாதிப்புகள் என்ன?**

**பதில் :**

இந்தத் திட்டத்தின் மூலம், சுமார் 2,500 ஹெக்டேர் நிலப்பரப்பு நீரில் மூழ்கடிக்கப் படுகிறது. காடுகள், விவசாய நிலங்கள், உயிரினங்கள் அழிவை சந்திக்கின்றன.

மேலும், குறைந்தது 47 இடங்களில் உள்ள தமிழ் தொல்லியல் சான்றுகள், பண்டைய குடியிருப்புகள், குளங்கள் மற்றும் வரலாற்று ஆதாரங்கள் அழிக்கப் படுகின்றன. இது இயற்கை அழிவே அல்ல, தமிழர் வரலாற்றை அழிக்கும் செயல் ஆகும்.

**கேள்வி :**

**இந்த நில அபகரிப்புகளுக்கு எதிராக மக்கள் போராட்டம் எவ்வளவு முக்கியம்?**

தொடர்ச்சி: பக்கம் 08

# தமிழ் - முஸ்லிம் உறவைச் சீர்குலைக்கும் முயற்சியைத் தடுக்க முடியுமா?

மட்டு.நகரான்

இலங்கையில் தமிழர்களின் சுதந்திரப்போராட்டம் என்பது இலங்கையானது பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து ஆரம்பமானது.பிரித்தானியரது ஆட்சிக்காலத்தில் இலங்கையின் பல்வேறு கட்டமைப்புகளில் தமிழர்கள் ஆதிக்கம் செலுத்தியதன் காரணமாக இந்த நாட்டிலிருந்த பெரும்பான்மையின தேசிய சிங்கள சக்திகள் தமிழர்களை இந்த நாட்டில் நசுக்குவதற்கான முன்னெடுப்புகளை முன்னெடுத்துவந்தன. இலங்கையானது பிரித்தானியர்களிடமிருந்து சுதந்திரம் பெற்றதன் பின்னர் இலங்கையில் தமிழர்களை நசுக்குவதற்கான தீவிர முன்னெடுப்புகளை சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் முன்னெடுத்தன.



இந்த நாட்டில் பௌத்த சிங்கள மேலாதிக்க சக்திகளின் பல்வேறு அச்சுறுத்தல்களும் அடக்குமுறைகளுக்கும் மத்தியிலேயே இந்த நாட்டில் சிறுபான்மை சமூகமாக தமிழ் பேசும் மக்கள் காணப்பட்டார்கள். தங்களை மிஞ்சியவர்கள் இல்லையென்ற வகையில் இந்த நாட்டில் தமிழ் பேசும் சமூகம் சிங்கள பௌத்த மேலாதிக் கத்தினால் தொடர்ச்சியாக அச்சுறுத்தலுக்குள்ளாகிவந்தது.

இந்த நாட்டின் பூர்வீக குடிகளான தமிழர்களின் எழுச்சியை விரும்பாத சிங்கள பேரினவாத தேசம் தொடர்ச்சியாக தமிழர்கள் மீது அடக்குமுறைகளையும் அழிப்புகளையும் முன்னெடுத்துவந்தது.1958ஆம் ஆண்டு 1977ஆம் ஆண்டு 1983ஆம் ஆகிய காலப்பகுதிகளில் தமிழர்கள் மீது இனஅழிப்பு நடவடிக்கைகளை சிங்கள தேசம் முன்னெடுத்தது.

இதேபோன்று இந்த நாட்டில் வாழ்ந்த மற்றுமொரு தமிழ் பேசும் இனமான முஸ்லிம்கள் மீது இந்த நாடு சுதந்திரமடைவதற்கு முற்பட்ட காலம் தொடக்கம் தொடர்ச்சியாக அடக்குமுறைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. முஸ்லிம்களின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அவர்களின் கலாசாரங்களை ஏற்றுக்கொள்ள சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் மறுத்து 1915ஆம் ஆண்டு தொடக்கம் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளையும் அடக்குமுறைகளையும் முன்னெடுத்துவந்தனர்.



முஸ்லிம்களுக்கு எதிராக சிங்கள பௌத்த பேரினவாதம் 1976,1982 உட்பட காலத்திற்கு காலம் பல்வேறு அழிவுகளையும் அடக்குமுறைகளையும் முன்னெடுத்துவந்தது. ஆனால் முஸ்லிம்களை பொறுத்த வரையில் இந்த நாட்டில் பெரும்பான்மை சமூகத்துடன் இணைந்தும் சிங்கள பௌத்த மேலாதிக்க சக்திகளை எதிர்க்கமுடியாத நிலையில் தொடர்ச்சியாகவே அடக்குமுறைகளை எதிர்கொண்டுவந்தனர்.

ஆனால் தமிழர்களைப்பொறுத்த வரையில் இந்த நாட்டில் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவற்றிற்கு எதிராக கிளர்ந்தெழுந்த நிலைமையே காணப்பட்டது.அக்காலத்தில் தமிழர்களின் இந்த போராட்டத்தில் முஸ்லிம்களில் அடக்குமுறைக்கு எதிரான கருத்துகளைக்கொண்ட முஸ்லிம்களும் பங்குகொண்டதினால் இந்த போராட்டங்கள் பாரியளவில் சிங்கள தேசத்திற்கு சவாலாக அமைந்தது. அகிம்சை போராட்டத்திலும் ஆயுத போராட்டத்திலும் இந்த வடிவங்கள் தமிழர்கள் முஸ்லிம்களாக இணைந்து செல்லும் நிலையேற்பட்டபோது இந்த நிலைமையானது இந்த நாட்டின் சிங்கள பேரினவாதத்திற்கு அச்சுறுத்தலாக அமையும் என்ற காரணத்தினால் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான விரிசல்களையும் நம்பிக்கையீனங்களையும் முரண்பாடுகளையும் திட்ட மிட்ட வகையில் முன்னெடுப்பதற்கு சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் முன்னெடுத்த முயற்சிகளுக்கு முஸ்லிம்கள் மத்தியிலிருந்த இனப்பற்றில்லாத சமூக சிந்தனையற்றவர்கள் ஆதரவாக செயற்பட்டமை தமிழ்-முஸ்லிம்கள் மத்தியிலான உறவுகளில் பல்வேறு தாக்கங் களை ஏற்படுத்தும் வகையான செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட்டன.




இந்த நாட்டில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக முன்னெடுக்கப்பட்ட சிங்கள பௌத்த பேரினவாத அடக்குமுறைகளுக்கு எதிராக இரு இனங்களும் இணைந்து போராடமுனைந்தபோது சிங்கள பௌத்த பேரினவாதம் விழித்துக்கொண்டு இரு இனங்களுக்கும் இடையே மோதல் நிலைமையினை ஏற்படுத்தும் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துவந்தது.

சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு எதிராக அகிம்சை ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் தமிழ் பேசும் இனத்திற்கான உரிமை என்ற கோசத்துடன் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோது இந்த இரு இனங்களும் இணைந்து போராடும் நிலைமைகளை வடகிழக்கில் தடுப்பதற்கு பல்வேறு உபாயங்களை சிங்கள பேரினவாதம் முன்னெடுத்தது.



இதன் உச்சமாகவே 1988 தொடக்கம் வடகிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான மோதல்களை உக்கிரப்படுத்தும் செயற்பாடுகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுத்தது.இலங்கையில் இரு இனங்களையும் இணையவிடாமல் தடுப்பதற்கும் இரு இனங்களுக்கிடையே மோதல்களை ஏற்படுத்துவதற்கும் இலங்கையின் முக்கிய முஸ்லிம் அரசியல் தலைவர்கள் ஊடாக பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.



1990ஆம் ஆண்டுகாலப்பகுதிகளில் முஸ்லிம் இளைஞர்களைக்கொண்ட பல்வேறு ஆயுதக்குழுக்களினை உருவாக்கிய சிங்கள பௌத்த பேரினவாத அரசுகள் தமிழர்கள் மீது வன்முறைகளையும் அடக்குமுறைகளையும் முன்னெத்தனர். கிழக்கு மாகாணம் தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்துவாழும் மாகாணம் மட்டுமன்றி வடகிழக்கு இணைப்பின் அத்திபாரமாகவும் இருந்த காரணத்தினால் தொடர்ச்சியாக இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தினை பொறுத்த வரையில் சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழ்-முஸ்லிம் மக்களை கொதிநிலையில் வைத்திருப்பதற்கான முன்னெடுப்புகளையே முன்னெடுத்துவந்துள்ளது.வடகிழக்குதமிழர்தாயகம் என்ற நிலைமையினை இல்லாமல்செய்வதற்கும் தமிழர்களின் உரிமைப்போராட்டத்தினை சிதைப்பதற்கும் தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில் தொடர்ச்சியான விரிசல்களை பேணும் செயற்பாட்டையே முன்னெடுத்துவந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்திலும் விடுதலைப்புலிகள் மீது பழியை ஏற்படுத்துவதற்கும் விடுதலைப் புலிகள் மீது முஸ்லிம்கள் அதிருப்தியை ஏற்படுத்துவதற்கும் பல்வேறு முன்னெடுப்புகளை சிங்கள தேசம் முன்னெடுத்தே வந்துள்ளது.கிழக்கில் சிங்கள குடியேற்றங்களையும் ஆக்கிரமிப்புகளையும் முன்னெடுத்த அதே வேகத்துடன் தமிழ்-முஸ்லிம்கள் மீதான முரண்பாடுகளை ஏற்படுத்தும் செயற்பாடுகளையும் முன்னெடுத்தது.

எனினும் காலப்போக்கில் முஸ்லிம்கள் தமிழர்கள் மீதான நம்பிக்கையினை ஏற்படுத்துவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்தில் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்தபோதிலும் அக்காலத்தில் அதனை குழப்பும் வகையில் தமிழ் ஆயுத ஒட்டுக்குழுக்களையும் முஸ்லிம் ஆயுதக்குழுக்களையும் பயன்படுத்தி இனமுரண்பாடுகளை ஏற்படும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன



அதன் பின்னர் 2009ஆம் ஆண்டுக்கு பின்னரான காலத்தில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கு பிள்ளையான் -ஹிஷ்புல்லா போன்றவர்கள் பயன்படுத்தப்பட்டுவந்த நிலையில் அரசியல் ரீதியாகவும் அபிவிருத்திகள் ஏற்றத் தாழ்வுகள் உருவாக்கப்பட்டு தமிழ்-முஸ்லிம்கள் மத்தியிலான உறவுகளை சீர்க்குலைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டுவந்தன.

2015ஆம் ஆண்டு தொடக்கம் ஏற்பட்ட நல்லாட்சி காலப்பகுதியில் தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியிலான சந்தேகங்களை தீர்க்கும் வகையிலும் முரண்பாடுகளை நீக்கும் வகையிலும் பல்வேறு முயற்சிகள் தமிழ் தேசிய பரப்பில் முன்னெடுக்கப்பட்டுவந்தன.கிழக்கில் செயற்பட்டு வந்த சிவில் சமூக அமைப்புகள்,பொது அமைப்புகள் இதனை முன்னெடுத்துவந்தன.

எனினும் தமிழ்-முஸ்லிம் உறவுகளை சீர்குலைக்கும் வகையிலான பல்வேறு செயற்பாடுகளும் முன்னெடுக்கப் பட்டுவந்த நிலையிலேயே ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் முன்னெடுக்கப்பட்டதுடன் கிழக்கு மாகாணமும் இலக்கு வைக்கப்பட்டது.ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் மூலம் இந்த நாட்டில் பெரும்பான்மை சிங்கள பேரினவாத சக்தி மீண்டும் ஆட்சிபீடம் ஏறிய போதிலும் கிழக்கில் ஈஸ்டர் தாக்குதலை ஏற்படுத்தி தமிழ்-முஸ்லிம்களிடையே பிரிவினை ஏற்படுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் தடுக்கப்பட்டன.அதற்கான பிரதான காரணியாக அன்றைய காலகட்டதிலிருந்தது இருந்தது சிவில் அமைப்புகளும் தமிழ்-முஸ்லிம் அரசியல் தலைமைகளின் நிதானமான செயற்பாடுகளுமாகும்.

கிழக்கில் ஈஸ்டர் குண்டுத்தாக்குதலை வைத்தும் தமிழ்-முஸ்லிம்களுக்கிடையிலான முரண்பாடு களை வைத்தும் பிள்ளையான் போன்றவர்கள் மேலெழுந்த போதிலும் காலப்போக்கில் அதன் உண்மைநிலைகளை மக்கள் புரிந்துகொண்ட நிலையில் பிள்ளையான் போன்றவர்கள் அரசியலிலிருந்து ஓரங்கட்டப்பட்டனர்.

இன்றைய காலப்போக்கில் இனவாதம் என்பது மிகவும் குறைந்த நிலையில் உள்ளபோதிலும் தமிழ்-முஸ்லிகளிடையே உறவு என்பது இன்னும் நீரின் மேல் காணப்படும் எண்ணெய்யைப்போலவே காணப்படுகின்றது. கடந்தகாலத்தினை போல் இல்லாவிட்டாலும் ஓரளவு இரு இனங்களிடையே முரண்பாடுகள் இல்லாத ஒன்றுபட்ட உணர்வுகள் காணப்படுகின்ற போதிலும் முரண்பாடுகளை ஏற்படுத்தி அதன்மூலம் இலாபம் அடையும் சக்திகளின் செயற்பாடுகள் தொடர்ந்து இருந்தவண்ணமே உள்ளது.

தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு இடையே காணப்படும் காணி தொடர்பான முரண்பாடுகளை வைத்து இன்று இரு இனங்களிடையே குழப்பங்களை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றபோதிலும் இரு இனங்களிடையே காணப்படும் புரிந்துணர்வுகளும் கடந்தகால

**தொடர்ச்சி: பக்கம் 08**



# இன்றைய காலமும் இளம் பராயத்தினரின் துர் மரணமும்...

தொகுப்பு **வன்னியூர் கலா பாரதீ**

இன்றைய காலகட்டத்தில் சமூக ஊடகங்கள் செய்திகளாக பதிவு செய்யும் பல விடயங்களில்...

இளம் பராயத்தினரின் துர் மரணங்கள் இல்லாத நாளே இல்லை என்று தான் சொல்ல வேண்டும். இது பெரும் துன்பியலான விடயமாக இருக்கிறது. அதிலும் தற்கொலை மரணங்கள் செய்திகளாக ஒரு பக்கம் நிரப் பீடு செய்கின்றன.



ஒரு சமூக விருட்சத்தின் கிளைகளான இளவயதினரின் இழப்பு என்பது... அந்தச் சமூகத்தின் ஆணி வேரையே ஆட்டம் காண வைக்கிறது.

"இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்" என்ற வார்த்தைகள் பெரும் இடைவெளியை ஏற்படுத்திக் விடுமோ என்ற பயம் மனதில் எழுகின்றது.

தற்கொலைகளைத் தூண்டும் பலவிதமான செயற்பாடுகளை இந்தச் சமூகம் கொண்டிருக்கிறது. சின்னச் சின்ன விடயங்களில் கூட சிந்தித்து முடிவை எடுக்கத் தெரியாமலும்... சாதாரண விடயங்களை எதிர் கொள்ளத் முடியாமலும் இந்த இளம் பராயத்தினர் இருக்கிறார்கள் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. இதனை நாம் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்.

பரபரப்பான வாழ்க்கை முறையினால் பெரியவர்களுக்கும் இளையவர்களுக்கும் இடையேயான தொடர்பாடல்கள் குறைந்த வண்ணமே இருக்கின்றன. நல்ல கருத்துக்களை நற்சிந்தனைகளை ஆன்மீக உணர்வை ஏற்படுத்தும் பெரியவர்களின் கருத்துக்களை புறம் தள்ளும் மனப்போக்கு நம் இளையோரிடம் காணப்படும் ஆரோக்கியம் அற்ற நிலையாக இருக்கிறது.

அத்தோடு தற்கால சட்ட திட்டங்கள், வாழ்வியல் மாற்றங்கள் மற்றும் தனிமைப் பட்ட இலத்திரனியல் பாவனை இவை எல்லாம் கூட இம் மரணங்கள் அதிகரிக்க காரணமாக அமைகிறது என்று சொன்னால் மிகையாகாது.

தற்போதைய பிள்ளைகளின் ஆடம்பரமான வாழ்க்கை முறை அவர்களின் எதிர்பார்ப்பு நிறைந்த மனவியலை அதிகப் படுத்துகிறது. ஒரு விடயத்தை அடைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கி நிற்கிறது. சில எதிர்பார்ப்புகள் நிறைவேறாத பட்சத்தில் அடுத்த நிலைக்கு மனம் முடிவெடுக்கும் இயல்பை இழந்து விடுகின்றது. இதுவும் ஒரு காரணம் என்றே கருத வேண்டும்.

இப்போதெல்லாம் சேர்ந்து வாழும் வாழ்க்கை முறை சிதறி விட்டது. பிள்ளைகள் மனச் சோர்வு, சஞ்சலம் அடையும் போதெல்லாம்.. அவர்கள் அருகில் இருந்து அரவணைக்க ஆறுதல் கூற பெரியவர்கள் இல்லாத வீடாக பலரது குடும்ப நிலை காணப்படுகிறது.

சரியான நேரத்தில் பிள்ளைகளை கவனிக்க, அவர்களோடு நல்ல விடயங்களை எடுத்துச் சொல்ல அவசியம் பெரியவர்கள் இருக்க வேண்டும். அத்தோடு அவர்களின் துர் மரணத்தில் குறிப்பிட்ட விகிதம் சமூகமும் காரணப் பட்டு இருக்கிறது. சில பிள்ளைகள் சமூகத்தை எதிர் கொள்ளத் தெரியாதவர்களாக இருக்கிறார்கள்.

ஆகவே இதில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால்... எப்படி இந்தப் போக்கு அதிகரித்தது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதிலிருந்து பிள்ளைகளை காப்பாற்ற நாம் என்ன செய்ய முடியும் என முனைதல் வேண்டும்.

பிள்ளைகளின் வளர்ப்பு முறைகளில் பெற்றோரின் பங்கு மட்டும் அல்ல சட்டங்களும், சூழ் நிலைகளும் சாதகமாக இருக்க வேண்டும். அப்போது தான் மாற்றமும் ஏற்படும். எங்கள் பழைய வாழ்வியலை என்று தொலைத்தோமோ? இன்று நாம் அதன் பலனை அனுபவிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இந்த நவீன உலகத்தில் மனித வாழ்வியலின் வளர்ச்சி பல தொழில் நுட்ப விடயங்களால் ஆளப் பட்டு முன்னேற்றம் காண முற்படும் வேளை.. அதே தொழில்நுட்பம் மனிதனின் மனவலுவை குறைத்துள்ளதா? மனித வாழ்வியலை பாதிக்கின்றனவா? என்றும் நினைக்கத் தோன்றுகின்றது.

இந்த நிலையை மாற்ற என்ன செய்யப் போகின்றோம் என்று... நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். ஏனெனில் இது ஒவ்வொரு குடும்பம் சார்ந்த பிரச்சினையாகவும் இருக்கிறது. அதுவே பரந்து நல்ல சமூக நிலையை உடைக்கின்றது.

முயன்றால் பாதிப்பை ஓரளவு குறைக்கலாம். இதனை மனதில் நிறுத்தி எங்கள் வீட்டில் இருந்தே நாம் மாற்று முயற்சிக்கான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

**"முயல்வோம் மாற்றத்தைக் காண முயற்சி செய்வோம்."**

• • •

## ஐ.நா பாதுகாப்பு சபை ... தொடர்ச்சி...

இந்த கூட்டத்திற்குப் பிறகு, இரு நாடுகளும் பரஸ்பர நம்பிக்கையை ஆழப்படுத்த வேண்டும், ஒத்துழைப்பை விரிவுபடுத்த வேண்டும், வேறுபாடுகளை முறையாக நிர்வகிக்க வேண்டும், உறவுகளின் வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும் என்று இந்தியாவுக்கான சீனத் தூதர் சூ ஃபீஹோங், கூறினார்.

புதுப்பிக்கப்பட்ட விமான சேவை ஒப்பந்தத்தை முன்கூட்டியே முடிக்க வேண்டியதன் அவசியத்தை இரு நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான நேரடி விமானங்கள் 2025 அக்டோபரில் அதிகாரப் பூர்வமாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுக்கான பிரிக்ஸ் தலைவராக இரு நாடுகளும் இணைந்து பணியாற்றுவதற்கு இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டுள்ளனர். இந்த ஆண்டு இந்தியா பிரிக்ஸ் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது.

2024 அக்டோபரில் ரஷ்யாவின் கசானில் நடந்த பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் சீன அதிபர் ஜி ஜின்பிங்கிற்கும் இடையே நடந்த சந்திப்பிற்குப் பிறகு இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் ஒரு திருப்பம் ஏற்பட்டிருந்தது.

## சவுதியிடம் அணு ஆயுத... தொடர்ச்சி...

உளவுத்துறை நிறுவனங்கள் ஆதரிக்கின்றன. அரசாங்கத்தை கவிழ்ப்பது மட்டுமல்ல, ஈரானை முழுவது மாக உடைப்பதே அவர்களின் நோக்கம்.

அமெரிக்கத் தாக்குதல் சமச்சீரற்ற ஈரானின் பதில் தாக்குதலை தூண்டக்கூடும். "வாஷிங்டன் தாக்கினால், தெஹ்ரானின் முதல் நடவடிக்கை அமெரிக்கத் தளங்களை நேரடியாக குறிவைக்காது. அதற்கு பதிலாக இஸ்ரேலை நோக்கி ஏவுகணைகள் செலுத்தப்படலாம். முக்கியமான ஹார்முஸ் ஜலசந்தியையும் ஈரான மூடக்கூடும். சீனா அல்லது ரஷ்யாவின் பொருளாதாரங்களுக்கு தீங்கு விளைவிக்க நாங்கள் விரும்பவில்லை என்றாலும், அமெரிக்காவின் ஆத்திரமூட்டல்களுக்கு பதிலளிக்கும் விதமாக இது தவிர்க்க முடியாததாக இருக்கலாம்" என்று கனானி கூறினார்.

## மத்திய கிழக்கு முழுவதும்... தொடர்ச்சி...

பார்க்க வேண்டும் என்று நான் வலியுறுத்தினேன், அது முடியாவிட்டால், விளைவு என்னவாக இருக்கும் என்பதைப் பார்க்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி புதன்கிழமை(11) வெள்ளை மாளிகையில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை மூடிய அறைக்குள் சந்தித்த பின்னர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க-ஈரான் பேச்சுவார்த்தைகளின் இரண்டாவது சுற்றுக்கான விவரங்கள் இன்னும் இறுதி செய்யப் படவில்லை. கடந்த ஆண்டு ஈரானிய அணுசக்தி நிலையங்கள் மீது இஸ்ரேலிய மற்றும் அமெரிக்க தாக்குதல்களுக்குப் பிறகு இரு நாடுகளின் அதிகாரிகளும் கடந்த வாரம் ஓமானில் முதல் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர்.

யுரேனியத்தை செறிவூட்டுவதற்கான அதன் உரிமையை முழுமையாக விட்டுக்கொடுக்க மாட்டோம் என்றும், பாலிஸ்டிக் ஏவுகணை திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகளையும் ஈரான் நிராகரித்துள்ளது. எந்தவொரு அமெரிக்க தாக்குதலும் மத்திய கிழக்கு முழுவதும் உள்ள அமெரிக்க தளங்களுக்கு எதிரான தாக்குதலை தூண்டும் என்று ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி எச்சரித்துள்ளார்.

## இலவு காத்த கிளி ... தொடர்ச்சி...

நடத்த அழுத்தம் கொடுக்க ஐரோப்பிய பிரதிநிதிகளை நாடவேண்டிய வங்குறோத்து நிலையில்தான் தமிழ்தேசிய அரசியல் கடந்த 16 வருடங்களாக சென்றுள்ளது என்பதற்கு இதைவிட உதாரணங்கள் தேவையில்லை..!

இலவு காத்த கிளி போன்று மாகாணசபை தேர்தலை எதிர்பார்க்கும் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் நிலை பரிதாப அரசியலாக இன்று மாறிவிட்டது.

## சுதந்திரமாக சிவராத்திரி... தொடர்ச்சி...

வழிபாடுகளில் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

எனவே, இம்முறை சிவராத்திரி தின வழிபாடுகளுக்கு அவ்வாறான இடையூறுகள் ஏற்படுத்தக்கூடாது. சைவமக்கள் சுதந்திரமாக வழிபடுவதற்கு இடமளிக்கப்பட வேண்டும். அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றான சைவமக்களின் வழிபாட்டுரிமை பாதுகாக்கப்படவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக இம்முறை வெடுக்குநாறி மலையில் சைவ மக்கள் சிவராத்திரி தின வழிபாடுகளில் ஈடுபடுவதற்குரிய வழிவகைகள் ஏற்படுத்தப்படும் என வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் உபாலி சமரசிங்கவால் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கட்டமைக்கப்பட்ட இன ... தொடர்ச்சி...

**பதில் :**

ஒரு சிலர் கொடி பிடித்து போராடுவதால் மாற்றம் வராது. பெருமளவு மக்கள் ஒன்றிணைந்து, இது அரசியல் கட்சிகளின்பிரச்சினை அல்ல, மக்கள் பிரச்சினை என்பதை தெளிவாக வெளிப்படுத்த வேண்டும்.

போராட்டங்கள் கட்சி அரசியலாக மாற்றப்படும் போது, மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். எனவே, மக்கள் மயப் படுத்தப்பட்ட, ஒன்றுபட்ட போராட்டம்தான் இந்த அபகரிப்புகளுக்கு எதிரான உண்மையான தீர்வாக அமையும்.

ஆவணப்படுத்தவேண்டும். இல்லையெனில், அடுத்த தலை முறைகள் நடந்த படுகொலைகளை அறியாமலேயே வளர்ந்து விடும். அதுதான் இன்று தமிழர்கள் எதிர் கொள்ளும் மிகப்பெரிய அபாயம்.

• • •

## தமிழ் - முஸ்லிம் உறவைச் ... தொடர்ச்சி...

கசப்பான செயற்பாடுகளும் பாடமாக கொண்டவர்களாகவே செயற்பட்டுவரும் நிலைமை காணப்படுகின்றது.

எவ்வாறாயினும் இந்த நாட்டிலும் தமிழ்பேசும் பகுதிகளிலும் ஆட்சிமாற்றத்தினையும் ஆட்சி அதிகாரத்தினையும் எதிர்பார்த்து இலவுகாத்த கிளிபோல் இருப்பவர்களின் செயற்பாடுகள் தொடரும் நிலைமையே காணப் படுகின்றது.இதன்மூலம் எதிர்காலத்தில் தமிழ்-முஸ்லிம் உறவுகளின் நிலைமையினை சீர்குலைக்கும் முயற்சியை தடுக்கமுடியுமா என்பது கேள்வியாகவே இருந்துவருகின்றது.

• • •

# ஏகபோக அரசியலுக்கு முற்றுப்புள்ளி: மலையகத்தில் துளிர்விடும் "தேசிய மக்கள் சக்தி"



மருதன் ராம்

இலங்கை நாட்டின் பொருளாதார முதுகெலும்பாகத் திகழும் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள், கடந்த இரண்டு நூற்றாண்டுகளாகப் பல்வேறு அரசியல் மற்றும் சமூகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். உரிமைகளுக்காகவும், கௌரவமான சம்பளத்திற்காகவும் வீதியில் இறங்கிப் போராடிய ஒரு சமூகத்தின் வரலாற்றில், 2026-ம் ஆண்டு ஒரு மிக முக்கியமான திருப்புமுனையாகப் பதிவாகியுள்ளது.



ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் நுவரெலியா விஜயம் மற்றும் எந்தவிதப் போராட்டங்களும் இன்றி வழங்கப்பட்டுள்ள சம்பள உயர்வு என்பன மலையக அரசியலின் போக்கையே மாற்றியமைத்துள்ளன. மலையக வரலாற்றில் இதுவரை காலமும் ஒரு சிறு தொகைச் சம்பள உயர்வுக்காகக் கூட தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களின் அழைப்பின் பேரில் வீதியில் இறங்கிப் போராட வேண்டியிருந்தது.



நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக தங்களை வருத்தி தேயிலை கொழுந்துகளைப் பறிக்கும் கைகள், வீதிகளில் பதாதைகளை ஏந்தி கோஷமிட வேண்டிய அவலநிலை நீடித்தது. இருப்பினும், தற்போதைய அரசாங்கத்தின் கீழ், குறிப்பாகத் தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்னவின் கூற்றுப்படி, இலங்கை வரலாற்றில் முதல் முறையாக எந்தவிதப் பணிப்புறக்கணிப்புகளும் அல்லது வீதிப் போராட்டங்களும் இன்றி தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆக்கக்கூடுதலான சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

புதிய முறையின் கீழ் ஒரு தோட்டத் தொழிலாளியின் அடிப்படைச் சம்பளம் 1,750 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் நிலவிய இழுபறிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். அமைச்சர் சமந்த வித்யாரத்ன நேரடியாகத் தோட்டங்களுக்குச் சென்று தொழிலாளர்களின் சம்பளப் பட்டியல்களை ஆய்வு செய்தமை, அரசாங்கம் இந்த விடயத்தில் கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்துகிறது.



நாளொன்றுக்கு 400 ரூபாய் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் 200 ரூபாய் தோட்ட பிராந்திய கம்பெனிகளும் மீதம் 200 ரூபாய் வரவு செலவுத் திட்ட கொடுப்பனவு அடிப்படையில் அரசாங்கத்தினாலும் வழங்கப்படும். அரசாங்கத்தினால் எவ்வளவு காலத்துக்கு இந்த தொகையை வழங்க முடியும் என்ற விமர்சனம் காணப்படுகின்ற போதிலும் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தற்போதைக்கு அதிகரித்துள்ளது என்ற நிலை காணப்படுகிறது. இந்த நிலையில் ஜனாதிபதியின் நுவரலியா விஜயம் மலையக பெருந்தோட்ட அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

"முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயற்றிட்டத்தின் மத்திய மாகாண நிகழ்வில் பங்கேற்கச் சென்ற ஜனாதிபதி, வழமையான அரசியல் மரபுகளை உடைத்து எறிந்தார். நுவரெலியா செல்லும் வழியில் தற்செயலாகத் தோட்டத் தொழிலாளர்களைச் சந்தித்து அவர்களின் சுகதுக்கங்களை விசாரித்தமை மலையக மக்களிடையே பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த சந்திப்பின்போது மலையக பெருந்தோட்ட மக்களை ஈர்த்த பல முக்கிய விடயங்கள் காணப்படுகின்றன.

குறிப்பாக துப்பாக்கி ஏந்திய பாதுகாப்புப் படையினரின் வளையத்திற்குள் இருக்காமல், ஒரு சாதாரண மனிதராகத் தொழிலாளர்களின் இடத்திற்கே சென்று அவர்களுடன் உரையாடினார் என்ற கருத்து மலையக மக்களிடையே முக்கிய பேசுபொருளாக உள்ளது. தொழிலாளர்கள் தங்களின் காணி உரிமை, லயன் அறைகளில் வசிக்கும் அவலம் மற்றும் பிள்ளைகளின் கல்விப் பிரச்சினைகளை ஜனாதிபதியிடம் நேரடியாகத் தெரிவித்தனர். இது ஒரு அரசியல் பிரச்சாரக் கூட்டமாக இல்லாமல், ஒரு தேநீர் இடைவேளையில் நடக்கும் சிநேக பூர்வமான உரையாடல் போல அமைந்தது மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

### மலையக அரசியலில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள்

இந்தச் சந்திப்பும், சம்பள உயர்வும் மலையகத்தின் பாரம்பரிய அரசியல் களத்தில் பாரிய மாற்றங்களை விதைத்துள்ளன. தசாப்த காலங்களாக மலையகத்தை ஆதிக்கம் செலுத்தி வந்த தொழிற்சங்கங்கள், "சம்பளத்தைப் பெற்றுத் தருவது நாங்கள்தான்" என்ற பிம்பத்தை வைத்தே அரசியலில் நிலைத்து நின்றன.



ஆனால், போராட்டம் இன்றி சம்பளம் உயர்வு வழங்கப்பட்டமை, இந்தச் சங்கங்களின் அவசியத்தை மக்கள் மத்தியில் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. தேசிய அரசியல் நீரோட்டத்தில் மலையக மக்களை ஒன்றிணைக்கும் முயற்சியில் வெற்றி பெற்று வருவதைக் காணமுடிகிறது.

இனவாத மற்றும் மொழிவாத அரசியலுக்கு அப்பாற்பட்டு, "உழைப்பிற்கேற்ற ஊதியம்" மற்றும் "சமூக நீதி" என்ற கோஷங்கள் தோட்டப்புற இளைஞர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளன. அரசாங்கத்திற்கும் மக்களுக்குமான தொடர்பில் இடைத்தரகர்களாக இருந்த அரசியல்வாதிகளின் தேவை குறைந்து வருகிறது.

ஜனாதிபதியின் நேரடி அணுகுமுறை, "நாங்கள் நேரடியாகவே ஜனாதிபதியிடம் பேச முடியும்" என்ற தன்னம்பிக்கையைத் தொழிலாளர்களுக்கு வழங்கியுள்ளது. 1,750 ரூபாய் அடிப்படைச் சம்பளம் என்பது வெறும் இலக்கம் மட்டுமல்ல, அது ஒரு தொழிலாளியின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் சிறு முன்னேற்றத்தின் அறிகுறியாகும். எனினும், வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில், இந்தச் சம்பள உயர்வு அவர்களுக்குப் போதுமானதாக அமையுமா என்ற விவாதங்களும் ஒருபுறம் நடக்கின்றன.



இருப்பினும், தோட்டக் கம்பனிகள் ஆரம்பத்தில் இந்தச் சம்பள உயர்வை வழங்க மறுத்த போதிலும், அரசாங்கத்தின் கடுமையான நிலைப்பாடும், சட்ட ரீதியான அழுத்தங்களும் இதனைச் சாத்தியமாக்கியுள்ளன. இது தொழிலாளர் வர்க்கத்தின் கௌரவத்தை நிலைநாட்டும் ஒரு வெற்றியாகக் கருதப்படுகிறது. மறுபுறம் எதிர் தரப்பில் உள்ள மலையக அரசியல் கட்சிகள் சம்பள உயர்வை வரவேற்கின்ற போதிலும் சில குறைபாடுகளை சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக சில தோட்ட பகுதிகளில் மேலதிக கொழுந்து பறிக்குமாறு அழுத்தம் கொடுக்கப்படுவதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். அதேநேரம் சம்பள

தொடர்ச்சி: பக்கம் 14

International Council of Eelam Tamils
அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை

50 years on...the struggle continues

# சிறீலங்காவின் 78வது சுதந்திர தினம் தொடர்பாக அனைத்துலக மக்களவை வெளியிட்ட அறிக்கை

**சுதந்திரத்திற்குப் பின் 78 வருடங்கள்: குற்றங்களுக்கு தண்டனை வழங்கப்படாமையும் தமிழ் மக்களின் உரிமை மறுப்பும் தொடர்கின்றன**

சிறீலங்கா சுதந்திரம் பெற்று 78 ஆண்டுகள் நிறைவுபெறுகின்ற இத்தருணத்தில், தமிழ் மக்கள் குழுமத்தின் உறுப்பினர்களும் பிரதி நிதிகளுமாகிய நாங்கள், தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இந்த நாள் எந்த வகையிலும் சுதந்திரத்தையோ அல்லது நீதியையோ அன்றேல் தமிழ் மக்களுக்கான சமத்துவத்தையோ குறிக்கவில்லை என்பதை மீள வலியுறுத்த விரும்புகிறோம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்த சுதந்திரம் அடக்கு முறையையோ அல்லது காலனீயத்தையோ முடிவுக்குக் கொண்டு வரவில்லை. அதற்கு மாறாக கட்டமைக்கப்பட்ட பாகுபாடு, அரசியல் ரீதியான விலக்கிவிடும் தன்மை, பொருண்மிய ரீதியாக ஓரங்கட்டுதல் போன்ற பண்புகளைத் தன்னகத்தே கொண்ட, மையப்படுத்தப்பட்ட சிங்களப் பெரும்பான்மை அதிகாரத்தைக் கொண்ட இன்னொரு காலனீய ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டதாகவே உணர்கிறோம்.

**ஐக்கிய நாடுகள் அறிக்கை: போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள்**

சிறீலங்காவில், 1983க்கும் 2009க்கும் இடையே நடைபெற்ற தமிழ் மக்களுக்கு எதிரான போரில் மிகவும் பரவலான வகையில், ஒழுங்க மைக்கப்பட்ட முறையில், வேண்டுமென்றே சிறீலங்கா அரசால், பாலியல் வன்முறைகள் இழைக்கப்பட்டன என்று 2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 13ம் திகதி, வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகளின் அறிக்கை சுட்டிக்காட்டியது.

முக்கியமாக அரச பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் துஷ்பிரயோகங்கள் பன்னாட்டு சட்டத்தின் அடிப்படையில் போர்க்குற்றங்களாகவும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களாகவும் வகைப்படுத்தக்கூடியவை என்று குறிப்பிட்ட அறிக்கையில் கண்டறியப் பட்டிருக்கிறது. பல தசாப்தங்களாகப் பாதிக்கப்பட்ட தமிழர்கள் வழங்கி வந்த சாட்சியங்களை மேற்படி அறிக்கை உறுதிப்படுத்தியிருக்கிறது. பெண்கள், ஆண்கள், முன்னர் தடுத்து வைக்கப்பட்டவர்கள் போன்றவர்களை இலக்கு வைத்து அடக்குமுறை, அச்சுறுத்துதல், கட்டுப்படுத்துதல் போன்றவற்றை முன்னெடுப்பதற்கான ஆயுதமாக பாலியல் வன்முறை பயன்படுத்தப்பட்டதை இந்த அறிக்கை வெளிச்சத்துக்குக் கொணர்கிறது. இன்று வரை பொறுப்புக்கூறல், உண்மை, நீதி, பாதிக்கப்பட்டவர்களுக்கான பரிகாரம் போன்றவற்றை உறுதிப்படுத்தக்கூடிய எந்தவிதமான நம்பத்தகுந்த தேசிய நீதிப்பொறிமுறையும் முன்னெடுக்கப்படவில்லை. அதற்கு மாறாக குற்றமிழைத்தவர்களுக்கு அவர்களது செயல்களுக்குப் பிரதியுபகாரமாகப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

**செம்மணி மனிதப் புதைகுழியின் கண்டுபிடிப்பு: காணாமலாக்கப்பட்ட மைக்கான சான்று**

சிறீலங்காவின் வடக்கில், 2025ம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட செம்மணி மனிதப் புதைகுழிகள் 1980 களிலும் 1990 களிலும் அறிக்கையிடப்பட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான துயரம் நிறைந்த சான்றாக விளங்குகின்றன.

மிகவும் பாரதூரமான மற்றும் ஒழுங்குக்கிரமமான மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதுடன் பன்னாட்டுத் தரங்களுக்கு ஏற்ற வகையில் சுயாதீனமான மற்றும் வெளிப்படைத்தன்மை வாய்ந்த விசாரணைகளை மேற்கொள்வதில் சிறீலங்கா அரசின் தோல்விகள் மட்டில் கவனத்தை ஈர்த்திருக்கிறது. குற்றஞ்சாட்டப்பட்ட சிவில் மற்றும் இராணுவக் குற்றவாளிகள் எவருமே தண்டிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**தொடர்ந்து முன்னெடுக்கப்படும் இராணுவமயமாக்கலும் தமிழ் மக்க ளின் குடிசார் வாழ்க்கையில் இடப்படும் கட்டுப்பாடுகளும்**

2009ம் ஆண்டில் ஆயுத மோதல் உத்தியோகபூர்வமாக முடிவுக்கு வந்த பொழுதிலும், வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழர் பிரதேசங்களில் மிகவும் செறிவான வகையிலும் விகிதாசாரமற்ற முறையிலும் இராணுவப் பிரசன்னம் வியாபித்திருக்கிறது. நிலத்தைப் பயன்படுத்தல், வீடமைப்பு, மீன்பிடி, விவசாயம், வர்த்தகம் போன்ற குடி மக்களின் நாளாந்த வாழ்க்கையின் மீது இராணுவத்தினர் மேற்கொள்ளும் கட்டுப்பாடுகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. தொடர்ந்து நீடிக்கும் இந்த இராணுவமயமாக்கல் மீள்கட்டுமானம், மக்களின் இயல்பு வாழ்க்கை, வாழ்வாதாரம் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதுடன், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான எந்தவித நியாயமான வாய்ப்பையும் இல்லாமற் செய்கின்றது.

பண்பாட்டு ரீதியான, மத ரீதியான காலனீயமயமாக்கல்: தமிழ் மக்களின் காணிகளில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத பௌத்த ஆலயங்கள் சமகாலத்தில், தமிழர் பகுதிகளில் சிறீலங்கா அரசு, பண்பாட்டு ரீதியாகவும் மத ரீதியாகவும் இனவழிப்பைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. வரலாற்று ரீதியாகத் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் அங்கு வாழும் மக்களின் சம்மதம் இன்றியும், முன்னர் சைவ ஆலயங்கள் இருந்த இடங்களிலும் மேற்கொள்ளப்படும் பௌத்த விகாரைகள் மற்றும் பௌத்த சிலைகளின் கட்டுமானங்கள், தமிழ் அடையாளங்களை வேண்டுமென்றே அழிப்பதற்கான முயற்சியாகவும் அடக்குமுறையின் அடையாளமாகவும் நோக்கப்படுகின்றன.

பொதுவாக இராணுவப் பாதுகாப்புடன் முன்னெடுக்கப்படும் இவ் வாறான செயற்பாடுகள் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்களின் பண்பாடு மற்றும் சமய உரிமைகளுக்கு எதிராக பண்பாட்டு ரீதியாகவும் சனத்தொகை ரீதியாகவும் மேற்கொள்ளப்படும் இனவழிப்பாகும்.

**தொடரும் அடக்குமுறையும் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டங்களின் துஷ்பிரயோகமும்**

பயங்கரவாதத்துக்குஎதிரானசட்டங்கள்,குறிப்பாகபயங்கரவாதத்தை தவிர்க்கும் சட்டம் (பிரிஏ) தமிழ் இளையோர், ஊடகவியலாளர்கள், செயற்பாட்டாளர்கள், மற்றும் அரசியல் பிரதிநிதிகள் ஆகியோரை இலக்கு வைக்கத் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது மனித உரிமைகள் தொடர்பில் சிறீலங்காவின் பன்னாட்டுக் கடமைகளின் தெளிவான மீறலாகும்.

ஒரு நீண்ட பொருண்மிய நெருக்கடியின் நடுவில், சமூக நீதி, மீள்கட்டுமானம், அனைவரையும் உள்வாங்குதல் போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை வழங்காமல், பாதீட்டில் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. விலக்கி வைத்தல் என்ற கொள்கை இன்னும் தொடர்வதையே இது எடுத்துக்காட்டுகிறது.

**எமது அடிப்படைக் கோரிக்கைகள்:**

சிறீலங்கா, பல்லின, பல்மத மக்களைக் கொண்ட ஒரு நாடு ஆகும். நீடித்த அமைதியை உருவாக்குவதற்கு இந்த யதார்த்தம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

திம்பு கோட்பாடுகளின் அடிப்படையில் எமது கோரிக்கைகளை நாம் மீண்டும் முன்வைக்கிறோம்.

- சிறீலங்கா தமிழ் மக்களை ஒரு தனித் தேசமாக அங்கீகரித்தல்
- வரலாற்று ரீதியாக அடையாளப்படுத்தப்பட்ட தமிழர் தாயகத்தை அங்கீகரித்தல்
- தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்
- சிறீலங்காவில் வாழும் அனைத்து தமிழ் மக்களுக்கும் குடியுரிமையை வழங்கி அவர்களது அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்துதல்.

உண்மை, நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் முழுமையான அரசியலமைப்பு மாற்றங்கள்நடைபெறாவிட்டால்குற்றம்இழைத்தவர்கள்தண்டிக்கப்படாமல் இருக்கும் நிலை தொடரும் என்பதையே பன்னாட்டுக் குற்றங்கள் இழைக்கப்பட்டதாக ஐக்கிய நாடுகள் வெளியிட்ட அறிக்கை, செம்மணி மனிதப் புதைகுழிகளின் கண்டுபிடிப்பு, தொடரும் பண்பாட்டு இனவழிப்பு போன்றவை எடுத்துக்காட்டுகின்றன.

**பன்னாட்டுச் சமூகத்துக்கான அழைப்பு:**

பன்னாட்டுச் சமூகம், ஐக்கிய நாடுகளின் பொறிமுறைகள், மற்றும் மனித உரிமைகள் அமைப்பு ஆகியவற்றின் முன் பின்வரும் கோரிக்கைகளை நாம் முன்வைக்கிறோம்.

- போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள், பாலியல் வன்முறைகள்,வலிந்து காணாமல் ஆக்கப்படல்போன்றவிடயங்களுக்கு பன்னாட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.
- கட்டமைப்பு ரீதியிலான இனவழிப்பை முடிவுக்குக் கொண்டு வர காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.
- தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் ஒரு நீதியான அரசியல் தீர்வுக்கான ஆதரவை வழங்குதல்.

1950களில் சமஷ்டி வேண்டித் தொடங்கப்பட்ட எமது போராட்டம் பின்னர் தொடர்ச்சியாக எமது மக்கள் மேல் ஏவப்பட்ட வன்முறைகள் காரணமாக சுதந்திரத்துக்கான போராட்டமாகப் பரிணமித்தது. இந்தப் போராட்டம் அடிப்படையில் நீதிக்கும் மாண்புக்கும் அமைதிக்குமான போராட்டம் ஆகும். உண்மை, நீதி, பொறுப்புக்கூறல் போன்றவை இல்லாத பட்சத்தில் அமைதி எட்டாக்கனியாகவே இருக்கும்.

**அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை**




# எப்ஸ்டீன் கோப்புகள்

## இந்தக் கதை ஒருபோதும் முடிவடையாமல் போகலாம்

### பகுதி 2 (இறுதிப் பகுதி)

2019 ஆம் ஆண்டுக்கு முன்னர் எப்ஸ்டீனுடன் தீவிரமாக தொடர்புடைய உயரடுக்கினர் மீதான நீண்டகால தயக்கம் ஆரம்பகால குறிகாட்டிகளில் ஒன்றாகும். பல ஆண்டுகளாக, பத்திரிகையாளர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் அரசியல் ஊழியர்கள் மத்தியில் எப்ஸ்டீனின் பெயர் சத்தமின்றி நீக்கப்பட்டது, ஆனால் அர்த்தமுள்ள ஆய்வு மீண்டும் மீண்டும் அதனை தேடியது. இது வதந்திகள், பாதிக்கப்பட்டவர்கள் அல்லது ஆவணப்படத் தகவல்கள் இல்லாததால் அல்ல, நிறுவனங்களின் ஆர்வமின்மை காரணமாக. ஆசிரியர்கள் கதைகளை மறுத்தனர், வழக்கறிஞர்கள் தங்கள் நோக்கங்களைக் குறைத்தனர் மற்றும் அரசியல் பிரமுகர்கள் இந்த சம்பவங்களுக்கு அருகில் தாம் இருப் பதைத் தவிர்த்தனர், அவ்வாறு செய்வது சிறிய அரசியல் பின்னடைவை ஏற்படுத்தினாலும் கூட. ஒரு நிதி கட்ட மைப்பின் கீழ், இந்த நடத்தை திறமையின்மையை விட முன்கூட்டிய எச்சரிக்கையை ஒத்திருக்கிறது.



எப்ஸ்டீன் மீது 2008 இல் ஒரு வலுவான வழக்குத் தொடராத ஒப்பந்தம் தொடர்பாக இரு கட்சிகளின் மௌனத்தை, வழக்கமான அரசியல் தர்க்கத்தின் மூலம் விளக்குவது கடினம். இந்த ஒப்பந்தம் பெயரிடப்படாத கூட்டு சதிகாரர்களைப் பாதுகாத்தது மற்றும் எதிர்கால வழக்குத் தொடரலை முன்கூட்டியே நிறுத்தியது, ஆனால் கட்சி எல்லைகளுக்கு அப்பால் அதன் தாக்கம் விரைவாக மங்கிவிட்டது. ஒருவருக்கொருவர் பயனடைவதற்குப் பதிலாக அவர்களுக்கு இடையில் பிரிவுகள் இருக்கும்போது, பரஸ்பர கட்டுப்பாடு பகுத்தறிவுள்ள பதிலாக மாறும்.


2019 ஆம் ஆண்டு எப்ஸ்டீனின் கைது மற்றும் மரணத்திற்குப் பிறகு, பொதுமக்கள் கவனம் சிறைத் தோல்விகளில் தீவிரமாகக் குவிந்தது, ஆனால் ஒரு தொடர் குற்றவாளி பல தசாப்தங்களாக உலகளாவிய உயரடுக்கு நெட்வொர்க்குகளுக்குள் குறிப்பிடத்தக்க இடையூறு இல்லாமல் எவ்வாறு செயற்பட்டார் என்பது குறித்து மிகக் குறைந்த அளவிலான தொடர்ச்சியான ஆய்வுகளே மேற்கொள்ளப்பட்டது. உளவுத்துறை மற்றும் எதிர்-புலனாய்வு தோல்விகள் கடுமையான பொது விவாத்திற்கு உட்படுத்தப்படவில்லை. ஒரு நிதிக்கட்டமைப்பின் கீழ், பெரிய அளவிலான சமரசத்தை ஒப்புக்கொள்வது முறையான பாதிப்பை அம்பலப்படுத்தும் மற்றும் நிறுவன நம்பகத்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும்.



ஊடக நடத்தை விசாரணையும் அதே கருத்தை பிரதிபலிக்கிறது. மேற்கத்திய ஊடகங்கள் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் உயரடுக்குடனான தொடர்புகளை பரவலாக உள்ளடக்கியிருந்தாலும், சாத்தியமான வெளிநாட்டு உளவுத்துறை பரிமாணங்கள் பற்றிய விவாதம் பெரும்பாலும் வரம்பற்றதாகவே உள்ளது அல்லது முன்கூட்டியே நிராகரிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு ஒற்றை நாடும் இதில் ஈடுபட வேண்டும் என்பதற்காக அல்ல, மாறாக எப்ஸ்டீனின் அணுகல் விபரங்கள் வெளிப்புற நாடுகளுக்கு மிகப்பெரிய பெறுமதியுடையதாக இருக்கும் என்பதால் இந்த சமச்சீரற்ற தன்மை குறிப்பிடத்தக்கது. தலையங்கக் கட்டுப்பாடு சீரமைப்பை விட ஆபத்து மேலாண்மையாக செயல்படுகிறது.

எப்ஸ்டீன் தொடர்பான உள்ளடக்கத்தில் மீண்டும் மீண்டும் பெயரிடப்பட்ட நபர்களின் அரசியல் தனிமைப் படுத்தலில் இதே போன்ற ஒரு முறை தோன்றுகிறது,

மொழியாக்கம்: **ஆர்த்தீகன்**




ஆனால் அரிதாகவே நீடித்த அழுத்தத்திற்கு ஆளாகிறது. சீரற்ற விளக்கங்கள் மற்றும் மறுபரிசீலனை இணைப்புகள் பெரும்பாலும் சுருக்கமான சர்ச்சையை உருவாக்குகின்றன, அதைத் தொடர்ந்து அமைதியாக இருக்கும். வெளிநாட்டு கொள்கைகளில் இது சட்டப் பற்றாக்குறையை விட கூட்டு தனிமைப்படுத்தலை ஒத்திருக்கிறது.



இந்த லென்ஸ் மூலம் நீண்டகால கொள்கை தொடர்ச்சி கூட வித்தியாசமாகத் தெரிகிறது. மாறிவரும்

**தொடர்ச்சி: பக்கம் 14**



# அமெரிக்காவின் தாக்குதலில் இருந்து ஈரானைக் காப்பாற்றுமா சீனா?

வேல்ஸில் இருந்து **அருஸ்**

ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதல் நடக்குமா இல்லையா என்ற கேள்விகள் பல மட்டங்களில் எழுந்துள்ளன. ஈரான் மீதான போரில் தனது அரசியல் எதிர்காலம் தங்கியுள்ளது என்பதை அறிந்த இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகு கடந்த 11 ஆம் நாள் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

அமெரிக்க அதிபர் ட்றம்பிற்கு போருக்கான அழுத்தத்தை கொடுப்பதே இந்த பயணத்தின் நோக்கம். அவரின் பயணத்திற்கு முன்னரே அமெரிக்க அரசியல்வாதிகள் தொடக்கம் உலகின் முன்னனி அரசியல்வாதிகள் மற்றும் தொழில்அதிபர்களை உள்ளடக்கிய எப்ஸ் ரின் கோப்புக்கள் வெளியாகியிருந்தன. அவும் அமெரிக்காவுக்கான மறைமுகமான அழுத்தமாகவே பார்க்கப்பட்டது.



ஆனாலும் கடந்த வாரம் ஓமானில் இடம்பெற்ற பேச்சுக்களில் அணுசக்தித்த திட்டத்தை முற்றாக கைவிடுவதற்கும், நீண்டதூர ஏவுகணைகளின் தூரவீச்சை குறைப்பதற்கும் ஈரான் மறுத்துவிட்டது. அதனை தொடர்ந்து பேச்சுக்களில் பங்குபற்றிய அமெரிக்காவின் சிறப்பு பிரதிநிதி Steve Witkoff ஈரானுக்கு அருகில் உள்ள கடலில் தரித்து நிற்கும் USS அப்ரஹாம் லிங்கன் என்ற கப்பலுக்கு சென்று போருக்கான ஆயத்தங்களை பார்வையிட்டது என்பது ஈரானுக்கான அச்சுறுத்தலாகவே பார்க்கப்பட்டது.

நெத்தனியாகுவுடன் மூடிய அறைக்குள் இடம்பெற்ற 3 மணிநேர பேச்சுக்களின் பின்னரும் அமெரிக்க அதிபர் ஈரானுடனான பேச்சுக்களுக்கான தனது விருப்பத்தையே வெளிக்காண்பித்திருந்தார். எனினும் ஈரானை அச்சுறுத்தும் நோக்கத்துடன் இரண்டாவது விமானந்தாங்கி கப்பலான USS George H.W. Bush என்ற கப்பலை அனுப்பப் போவதாக ஈரானை மிரட்டியிருந்தார்.



ஆனால் ஈரான் முழு அளவிலான போர் மூழும் எனவும் மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க தளங்கள் உட்பட இஸ்ரேலும் பாரிய பதிலடியை சந்திக்கும் எனவும் தொடர்ந்து தெரிவித்து வருவதுடன், சீனா மற்றும் ரஸ்யா போன்ற நாடுகளிடம் இருந்து ஆயுதங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை தொடர்ந்து பெற்று தன்னை பலப்படுத்தி வருவதாகவே தெரிகின்றது.

வெனிசுலாவை இழந்ததன் மூலம் சீனாவுக்கான எரிபொருள் வினியோகத்தை சீனா இழந்துள்ளதால் ஈரான் விவகாரத்தில் சீனா மிகவும் இறுக்கமாகவே நிற்கின்றது. ஈரான் பிரச்சினையை முற்றிலும் அமெரிக்காவின் பிராந்திய பிரச்சினையாகப் புரிந்து கொள்ள முடியாது. அது சீனா மற்றும் ரஷ்யாவின் மூலோபாய நலன்களை அடையும் விளைவுகளைக் கொண்ட ஒரு புவிசார் அரசியல் இணைப்பாக மாறியுள்ளது. பெய்ஜிங்கைப் பொறுத்தவரை, ஈரான் வெறுமனே மற்றொரு மத்திய கிழக்கு கூட்டாளி மட்டுமல்ல. அது ஒரு பரந்த எரிசக்தி பாதுகாப்பு கொள்கையின் ஒரு பகுதியாகும் மற்றும் சீனா மேற்கொண்டுவரும் பரந்த புவியியலில் ஒரு வழித் தடமுமாகும். ஈரானிய கச்சா எண்ணெயை அதிகம் வாங்கும் நாடாக சீனா உள்ளது என்பதையும், சீனாவின் இறக்குமதிகள் ஈரானின் கடல்வழி எண்ணெய் ஏற்றுமதியில் மிகப் பெரிய பங்கைக் கொண்டுள்ளன என்பதையும் சீன - ஈரான் உறவுகள் வலியுறுத்துகின்றன.



இந்த உறவில் ஒரு அரசியல் பரிமாணமும் உள்ளது. அமெரிக்க அழுத்தம் இருந்தபோதிலும், முக்கிய மேற்கத்திய நாடுகள் அல்லாத நாடுகளில் மூலோபாய சுயாதீனத்தன்மையை தக்க வைத்துக் கொள்ள முடியும் என்ற கருத்தில் பெய்ஜிங் பல முதலீடுகளை செய்துள்ளது. இந்த நகர்வுகளில் ஈரான் ஒரு அடையாளமாக உள்ளது, இன்னும் கூறப்போனால் சீனா வர்த்தகம் செய்யும், பிராந்திய கூட்டாண்மைகளை உருவாக்கும், மேலும் வெளிசக்திகளினால் திணிக்கப்படும் அரசியல் நிலைமைகளை அது ஏற்றுக்கொள்ளாது என்பதைக் குறிக்கும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட நாடாக ஈரான் உள்ளது.

ஈரான் ஸ்திரமின்மைக்கு ஆளானால் அல்லது அதன் ஏற்றுமதி திறன் போர் அல்லது ஆட்சி சரிவால் கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டால், சீனா உடனடி சந்தை வாய்ப்பு சமநிலையற்ற தன்மை மற்றும் அதன் பெல்ட் அண்ட் ரோடு லட்சியங்களுடன் தொடர்புடைய பாதைகள் மற்றும் திட்டங்களில் நீண்டகால மூலோபாய நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்ளும்.

போர் அல்லது உள் சரிவு மூலம் ஈரானை பலவீனப்படுத்துவது, பன்முகத்தன்மை மற்றும் ஒருதலைப்பட்ச அழுத்தம்பற்றியசீனாவின்கொள்கையைபலவீனப்படுத்தும். அந்த வகையில்இ ஈரான் பிரச்சனை சீனாவின் பிராந்திய ராஜதந்திரத்தின் நம்பகத்தன்மை மற்றும் திடீர் மூலோபாய அதிர்ச்சிகளிலிருந்து கூட்டாளர்களைப் பாதுகாக்கும் அதன் திறனுடன் இணைகின்றது.

இஸ்ரேலில் 1.3 மில்லியன் ரஸ்யர்கள் வாழ்வதால் ஈரானுக்கான உதவிகளை ரஸ்யா மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொண்டுவரும்போதும், சீனா அதன் தொழில்நுட்ப மற்றும் படைத்துறை உதவிகளை அதிகரித்து வருகின்றது.

ஓமன் கடலுக்கு டைப் 055 நாசகாரக் கப்பலையும் டைப் 052 நாசகாரக் கப்பலையும் அனுப்பிய பிறகு, சீனா ஈரானுக்கு உளவுத்துறை ஆதரவை அதிகரித்து வருகின்றது. அமெரிக்க கடற்படை கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களின் அனைத்து நகர்வுகளையும் கடல் எண் 1 என்ற சீனாவின் மிகவும் நவீன உளவுக் கப்பல் கண்காணித்து, தகவல்களை ஈரானுக்கு அனுப்பி வருகின்றது.. ஆனால், மிக அதிக அளவில் துணிச்சலான நடவடிக்கையாக, சீனா அமெரிக்க தளங்களை புகைப்படம் எடுத்து வெளியிடுகின்றது. மேலும் இந்த முறை புதிதாக நிறுவப்பட்ட THAAD ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணை பேட்டரியை புகைப்படம் எடுத்து, இருப்பிடத் தரவுகளுடன் படங்களை ஆன்லைனில் சீனா வெளியிட்டுள்ளது.



இஸ்ரேலுடனான ரஷ்யாவின் உறவுகள்ஈரானுக்கான அதன் ஆதரவை மட்டுப்படுத்துவதை உணர்ந்த பிறகு, சீனாவின் பக்கம் திரும்பியதாகத் தோன்றும் ஈரானுக்கு முழு ஆதரவையும் வழங்க சீனா தயங்காது. இரண்டு நவீன நாசகாரக் கப்பல்களும், பிராந்தியத்தில் உள்ள கடல் எண் 1 என்ற உளவுக் கப்பலும் ஈரானுக்கு தரவை வழங்குவதால், ஒரு திடீர் தாக்குதலுக்கு எந்த வாய்ப்பும் இல்லை என்பதுடன், இது பூஜ்ஜிய உயிரிழப்பு தாக்குதலை நடத்த விரும்பும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு அவர்களின் திட்டத்தை கடினமாக்குகிறது.

இன்று வரையிலும், பல ஈரானிய தளங் கள் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டுள்ளன, இதனால் கடந்த சில நாட்களில் ஈரானிய அரசாங்கத்திற்கு எதிராக சில வெற்றிகரமான நாசவேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, அவற்றில் இராணுவ இலக்குகளும் அடங்கும். எனவே இந்தியாவுடனான கடைசி மோதலில் பாகிஸ்தானுக்கு வழங்கியதைப் போன்ற ஒன்றை ஈரானுக்கு சீனா வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவர்கள் அதை மறுத்தாலும் கூட. சீன ஆதரவு வெளிப்படையாக ரேடார்களுக்கு அப்பாற்பட்டது.

கடந்த இரண்டு மாதங்களில் சீனாவிலிருந்து ஈரானுக்குச் சென்ற விமானங்கள் அதை உணர்த்துகின்றன, சில நேரங்களில் ஒரு நாளைக்கு பல முறை, அவை தாக்குதல் ஒருங்கிணைப்பு உபகரணங்களை எடுத்துச் சென்றிருந்தன. அவற்றில் தரைவழி பெய்டூ நிலையங்களும் அடங்கும். ஈரான் கிட்டத்தட்ட அதன் முழு ஆயுதக் களஞ்சியத்தையும் பெய்டூவிற்கு தொழில்நுட்பத்திற்கு மாற்றியுள்ளது.

மேலும் சீன ரேடார்களைப் பெற்ற பிறகு, அவர்கள்

தொடர்ச்சி: பக்கம் 13

### சுவிட்சர்லாந்து தூதரக... தொடர்ச்சி...

அவசரம், இடைக்கால அறிக்கையை தமிழ் அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் நிராகரிக்கின்றன என்பதை வெளிப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

அதன் காரணமாகவே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 15ஆம் திகதி பொதுக்கூட்டத்தினை நடத்துவதாக அறி வித்திருக்கிறார். மறுபக்கத்தில் சி.வி.கே.விரும்பாத குமரவடிவேல் குருபரன், சுமந்திரன் விரும்பாத சிறீதரன் ஆகியோரை தவிர்க்க வேண்டிய தேவை தமிழரசுக்கு காணப்படுகின்றது.

கஜேந்திரகுமாரின் கூட்டத்தைக் காரணம் காண்பித்து சுமந்திரன் சுவிட்சர்லாந்தின் கூட்டத்தினை தவிர்க்கும் நகர்வை கனகச்சிதமாக முன்னெடுத்திருக்கலாம். எது எவ்வாறாக இருந்தாலும் இப்போதைக்கு கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுவிட்டது.

இந்த இடத்தில் சுவிட்சர்லாந்திடமும் கேள்விகள் உள்ளன. முதலில் கட்சியின் தலைவர்கள் அல்லது செய லாளர்கள் அத்துடன் அவர்கள் சார்ந்த பிரதிநிதி என்ற அடிப்படையில் சந்திப்பைச் செய்திருக்கலாம். எவ்வாறு சிறிதரன், குருபரன் அழைக்கப்பட்டனர். அதற்கான வரை யறை என்ன என்பது தெரியாதுள்ளது.

அதுமட்டுமன்றி, மைத்திரி- ரணில் கூட்டாட்சி அரசாங்கத்தின் போது முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியலமைப்புக்கான முயற்சியில் சுவிட்சர்லாந்து முக்கிய தூணாக விளங்கியது. 2016-2020 ஆண்டுகளுக்கான சுவிஸ் ஒத்துழைப்பு மூலோபாயத்தின் கீழ், அவர்கள் வெறும் நிதியுதவி வழங்கும் நாடாக அன்றி, கூட்டாட்சி தொடர்பான நுட்பங்களை வழங்கும் ஒரு நிபுணத்துவத் தரப்பாகவே செயற்பட்டனர்.

இதனொரு கட்டமாக, 2016 ஒக்டோபரில் இலங்கை பாராளுமன்றக் குழுவினர் சுவிட்சர்லாந்துக்கு கல்விச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, அங்குள்ள பிராந்திய சுயா ட்சி முறையைப் பயின்றனர். மொழிரீதியான மற்றும் கலா சார ரீதியான பன்முகத்தன்மையை எவ்வாறு ஒரு ஒற்றைக் கட்டமைப்பிற்குள் பேணலாம் என்பதற்கு 'சுவிஸ் மாதிரி' ஒரு சிறந்த உதாரணமாக முன்வைக்கப்பட்டது.

அதேபோன்று 2017 இடைக்கால அறிக்கை தயாரிப்பில் சுவிட்சர்லாந்தின் தொழில்நுட்ப ஆலோசனைகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. எவ்வாறாயினும் 2016-2018 காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட இடைக்கால அறிக்கைக்காக சுமார் 158 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டபோதும் அது தற்போது வரையில் கிடப்பி லேயே உள்ளது.

அதுட்டுமன்றி, சுவிட்சர்லாந்து அரசாங்கம் வெறும் அரசியல் ஆலோசனைகளை மட்டும் வழங்கவில்லை; மனித பாதுகாப்பு ஆலோசகர் (Human Security Advis-er) ஒருவரை கொழும்பில் நியமித்து, இடைக்கால நீதி மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகளைக் கண்காணித்தது. ஆனால், தென்னிலங்கை அரசியல் மாற்றங்களினால் அந்த கோடிக்கணக்கான ரூபா செல விலான முயற்சிகள் இறுதியில் தோல்வியிலேயே முடிந்தன.

அந்தவகையில் பார்க்கின்றபோது சுவிட்சர் லாந்துக்கு தான் செலவழித்த நிதி, நேரம், உழைப்பு ஆகியவற்றுக்கான விளைவினை ஏதோவொரு வகையில் மீளப்பெறுவதற்கான தேவையுள்ளது. ஆகவே தற்போதைய சூழலை சுவிட்சர்லாந்து பயன்படுத்துவதற்கு விளைந்திருக் கலாம்.

அதேநேரம், சுவிட்சர்லாந்தின் முயற்சியை கடந்த கால நோர்வேயின் சமாதான முயற்சிகளுடன் ஒப்பிடவே முடியாது. நோர்வேயின் தலையீடு என்பது இரு தேசிய இனங்களுக்கும் அதாவது அரசாங்கத்துக்கும் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான அதிகாரப்பகிர்வுக்கான மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமாகவே இருந்தது.

ஆனால், சுவிட்சர்லாந்தின் முயற்சி என்பது பாதிக்கப்பட்ட தமிழ்த் தரப்பிற்குள்ளேயே ஒற்றுமையை ஏற்படுத்துவதை மையப்படுத்தியதாகவும், ஏதோவொரு வகையில் அரசுடன் இணக்கப்பாட்டை எட்ட வைப்பதையும் நோக்கமாகவே கொண்டிருக்கின்றது.

இதில் சுவிட்சர்லாந்து தமிழ்த் தேசிய அபிலாசைகளை மலினப்படுத்துவதற்கு முனைகின்றதா என்றொரு விசனம் இருந்தாலும் தமிழினம் தங்களுக்குள்ளேயே பேசிக்கொள்ள முடியாத நிலையில், அதற்கும் வெளிநாட்டு மத்தியஸ்தம் வகிக்க வேண்டிய சூழல் உருவாகியிருக்கும் வெட்கக்கேடான நிலைமையானது தமிழ்த் தேசிய அரசிய லின் தார்மீகத் தோல்வியே.

• • •







### இந்திய பால் உற்பத்தியை ... தொடர்ச்சி...

வேலைவாய்ப்பில்75% பெண்கள் ஈடுபடுவதை விட, 10 கோடி மக்கள் நேரடி நன்மை பெற்றுள்ளனர்.

#### இந்திய பால் துறையைச் சுற்றியுள்ள சவால்கள்

வேகமான வளர்ச்சிக்கு மத்தியில், இந்திய பால் துறையில் அமைப்புசார் சிக்கல்கள் உள்ளன. ஒவ்வொரு மாடும் குறைந்த உற்பத்தி அளவை கொண்டுள்ளது. கால்நடை ஆபத்தான நோய்கள் (பாதம்-வாய் நோய்) பெரும்பாலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. காலநிலை மாற்றம், சிறப்பான சேமிப்பு வசதி இல்லாமை, மற்றும் பண்ணையாளர் வருமான நிலைத்தன்மை இல்லாமை போன்றவை துறையின் நீடித்த வளர்ச்சிக்கு ஆபத்தாக இருக்கின்றன.

#### 2030 வரை பால் துறையின் நோக்குத்திட்டம்

2030 இல் 300 MMT பால் உற்பத்தியை அடைவதற்காக, அரசு செயற்கை விதை பரப்பலை விரிவுபடுத்துதல், காலநிலை நிலைத்த நிலக்கடந்த பண்ணைப்பயிர் முறைகளை ஊக்குவித்தல், தடுப்பூசி திட்டங்களை விரிவுபடுத்துதல், மற்றும் குளிர்சாதன சேமிப்பு கட்டமைப்புகளை உருவாக்கு தல் போன்றவற்றில் கவனம் செலுத்துகிறது. இவை பண் ணையாளர் வருமானத்தை நிலைப்படுத்தவும், இந்தியாவை பன்னாட்டு வேளாண் ஏற்றுமதி முன்னிலை நாடாக மாற்றவும் உதவும்.

இவ்வாறான கால்நடை வளர்ப்பு பால் உற்பத்தியில் இந்தியா முன்னணியில் உள்ளதை தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு கட்சியில் பிரதான பாத்திரத்தை கையாளும் ஜே வி பி கட்சி செயலாளர் ரில்வின் சில்வா பார்வையிட்டு அதற்கு சமனாக இலங்கையிலும் பால் உற்பத்தியை ஊக்குவிக்கும் திட்டங்களை மேற்கொள்ளலாம் அது நல்ல விடயம்.

ஆனால் இலங்கையில் பால் உற்பத்தியில் அதிகளவான பால் பெறப்படும் மாவட்டங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் தரை பிரச்சினையானது கடந்த இரண்டு சகாப்தங்களாக தீர்க்கப்படாத நிரந்தர தீர்வு இன்றி நீண்டு செல்கிறது.

மட்டக்களப்பு, மயிலத்தமடு , மாதவனை மேய்ச்சல் தரைப் பிரச்சினையானது, கடந்த 1970 ஆண்டுகளில் கால் நடை வளர்ப்பிற்காக பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டு 1975ல் நில அளவை செய்யப்பட்டு 4,000 ஏக்கர் நிலம் மேய்ச்சல் தரையாக பிரகடனப்படுத்தப்பட்டது. பின்னர், போர்ச் சூழலில் 1983 தொடக்கம் 2009 வரை இப்பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோதும் பண்ணையாளர்கள் அதைப் பயன்படுத்தினர்.

விடுதலைப்புலிகள் மௌனிப்பின் பின்னர் 2010 ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் இருந்து, குறிப்பாக 2012க்குப்பின்னர் மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நிலங்கள் விவசாயத்திற்காக வழங்கப்பட்டபோது, மேய்ச்சல் தரை அபகரிப்பு தீவிரமடைந்தது.

அம்பாறை, மொனராகலை, பொலன்னறுவை மாவட்டங்களில் இருந்து வரும் பெரும்பான்மை இன விவசாயிகளால் அத்து மீறி பயிரிடப்படும் சோளத்தை, மேய்ச்சலுக்கு வரும் மாடுகள் உண்பதால், மாடுகள் கொல் லப்படுவது, பண்ணையாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பது தொடர்கதை ஆகியுள்ளது. அதனோடு திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்திற்கான முன் எடுப்புகளும் தொடங்கப் பட்டுள்ளன.

2011 ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் அளிக்கப்பட்ட நிலப்பரப்பை மயிலத்தமடு , மாதவனை மேய்ச்சல் தரைகளை மீளப் பெற்றுத் தருமாறு கோரி, தமிழ் பண்ணையாளர்கள் பல வருடங்களாக கவனயீர்ப்பு போராட் டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்த நீண்ட கால முரண்பாடு, இன ரீதியான காணி அபகரிப்பு மற்றும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்துவதாக பண்ணையாளர்கள் குற்றம் சாட்டு கின்றனர்.

எனவே இந்த தேசிய பிரச்சினையாக மாறியுள்ள மட்டக்களப்பு மாவட்ட மேய்ச்சல் தரை பிரச்சினையை தீர்ப்பதன் மூலம் மேலும் பால் உற்பத்தியை அதிகரிக்கலாம்.

• • •

### அமெரிக்காவின் தாக்குத ... தொடர்ச்சி...

பாகிஸ்தானின் இணைப்பு 17 ஜப் போன்ற ஒன்றை இயக்கத் திட்டமிட்டுள்ளனர். அது நடந்தால், ஈரானுக்கான இலக்கு கையகப்படுத்தும் வழிகளை சீனா நேரடியாக வடிவமைத்துக் கொடுத்துள்ளது எனலாம்.

கடந்த ஜூன் மாதம் ஈரான் மீதான தாக்குதலுக்கு முன்னர் ஏற்பட்ட மின்தடையை முற்றிலுமாகத் தடுக்கும் நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டுள்ளனர். ஈரானின் C4ISR திறன்கள் கடந்த ஏழு மாதங்களில் பெரும் விரிவாக்கத்தைப் பெற்றுள்ளன, மேலும் அமெரிக்க தளங்க ளின் புகைப்படங்களை சீனா வெளியிட்டது, ஈரானுக்கு முடிந்தவரை அதிக உளவுத்துறை தகவல்களை வழங்க அவர்கள் விரும்புவதை தெளிவாகக் காட்டுகிறது. அதாவது அமெரிக்க - ஈரான் போர் வெனிசுலா போல இருக்காது என்று நாம் கருதலாம் ஆனால் அமெரிக்காவிடம் என்ன திட்டம் உள்ளது என்பதை பொறுத்தே களம் தீர்மானிக்கப்படும்.

• • •

## எப்ஸ்டீன் கோப்புகள் ... தொடர்ச்சி...

நிர்வாகங்கள் மற்றும் மாறிவரும் சொல்லாட்சிகளில், உணர்திறன் வாய்ந்த புவிசார் அரசியல் பகுதிகளில் முக்கிய சீரமைப்புகள் குறிப்பிடத்தக்க வகையில் நிலையானதாகவே உள்ளன. மூலோபாய கூட்டணி இதில் பெரும்பகுதியை விளக்குகிறது, ஆனால் வெளிநாட்டு கொள்கைகளில் ஒரு வலுப்படுத்தும் பொறிமுறையாக இது செயல்படுகிறது, விளைவுகளை ஆணையிடுவதற்குப் பதிலாக அரசியல் ரீதியாக பாதுகாப்பான விருப்பங்களின் வரம்பைக் குறைக்கிறது.



இறுதியாக, எப்ஸ்டீன் கோப்பு வெளியீடுகளின் அமைப்பு இந்த தர்க்கத்தை பிரதிபலிக்கிறது. அதிகாரிகள் முதலில் முழு காப்பகத்தையும் மதிப்பாய்வு செய்து, ஒரு பகுதியை வெளியிட்டு, மில்லியன் கணக்கான பக்கங்களை மறைத்து, சில தனிநபர்களை அம்பலப்படுத்தி, மற்றவர்களைப் பாதுகாக்கும் அதே வேளையில், தகவல் சமச்சீரற்ற தன்மையைப் பராமரிக்கும் அதே வேளையில் இந்த செயல்முறையை வெளிப்படைத்தன்மை போன்று தெரியும்படியாக வடிவமைத்துள்ளனர். வெளிவிவகாரக் கொள்கை அல்லது உள்நாட்டு பாதுகாப்பு என்று வந்தவுடன் முழு வெளிப்படுத்தல்களும் தேவையற்றதாகவும், ஸ்திரமின்மைக்கு ஆளாக்குவதாகவும் மாறும். தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுப்பாட்டைத் தக்கவைத்துக்கொள் வது எதிர்கால விருப்பத்தேர்வைப் பாதுகாக்கிறது.

இவை எதுவும் ஒருங்கிணைப்பு அல்லது கட்டளையை நிரூபிக்கவில்லை. இது மாதிரி நிலைத்தன்மையை நிரூபிக்கிறது. பயனுள்ளதாக இருக்க நடவடிக்கைகள் வெளிப்படையாகப் பயன்படுத்தப்பட வேண்டியதில்லை.

தற்போது வெளியிடப்பட்ட ஆவணங்களால் யாருக்கு நன்மைகள் கிடைக்கும் என்ற கேள்விக்குத் திரும்புவது தாக்கங்களைத் தவிர்க்க முடியாததாக ஆக்குகிறது. எப்ஸ்டீனின் நடவடிக்கைகள் ஒருபோதும் வெளிப்படையாக எப்ஸ்டீனுக்கு பயனளிக்கவில்லை. அவர் அதை பொது செல்வாக்காகவோ அல்லது வெளிப்படையான அதிகாரமாகவோ மாற்றவில்லை. மாறாக, அவர் ஒருபோதும் பார்க்காத்தவர்களுக்கு இது பயனளித்ததாகத் தெரிகிறது. உயரடுக்கின் அமைதியான சமரசம், அதிகரித்த கொள்கை எச்சரிக்கை மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட ஆய்வு அனைத்தும் ஒரு தனி குற்றவாளியின் நடத்தையை விட வெளிநாட்டு உளவுத்துறையின் நன்மையுடன் நெருக்கமாக இணைகின்றன.

கோப்பு வெளியீடுகள் முழுமையடையாமல் இருப்பதற்கான காரணத்தையும் இந்த சூழல் விளக்குகிறது. மொத்த எப்ஸ்டீன் காப்பகத்தில் தோராயமாக பாதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை நீதித்துறை இப்போது ஒப்புக்கொள்கிறது. பாதிக்கப்பட்டவர் பாதுகாப்பு, சட்ட சலுகை மற்றும் உணர்திறன் ஆகியவை அதிகாரப் பூர்வ விளக்கங்களில் அடங்கும், அனைத்தும் தனிமையில் செல்லுபடியாகும். ஆனால் அதே தர நிலைகள் பாதிக்கப்பட்டவர்களின் அடையாளங்களை வெளிப்படுத்துவதைத் தடுக்கவில்லை, அதே நேரத்தில் புள்ளிவிவரங்கள் பாதுகாக்கப்பட்டிருந்தாலும். இந்த சமச்சீரற்ற தன்மை வடிகட்டுதல் செயல்முறை நடுநிலையானது அல்ல என்பதைக் குறிக்கிறது. உளவுத்துறை கருதுகோளின் ஒரு பகுதி கூட சரியாக இருந்தாலும், முழு வெளிப்படுத்தல் வெறுமனே சங்கடத்தை ஏற்படுத்தாது; நவீன அதிகார அமைப்புகளில் உண்மையில் எவ்வளவு சக்திவாய்ந்த செயல்பாடுகள் உள்ளன என்பதை தனி நபர்கள் அம்பலப்படுத்துவார்கள். எந்த அரசும் அந்த கதவை விருப்பத்துடன் திறக்காது.

எனவே, ஒழுக்கமான முடிவு என்னவென்றால், எப்ஸ்டீன் "மொசாட்டால் நடத்தப்பட்டது" என்பதல்ல, மாறாக குறுகிய மற்றும் மிகவும் பாதுகாக்கக்கூடிய ஒன்று. நேரடி ஈடுபாடு, வசதி செய்தல் அல்லது சந்தர்ப்பவாத சுரண்டல் மூலம் மொசாட்டின் மூலோபாய நலன்களுடன் இணைந்த ஒரு கொம்ப்ரோமாட் தளமாக எப்ஸ்டீன் செயல்பட்டார் என்பது நம்பத்தகுந்தது, மேலும் முழு வெளிப்படைத்தன்மை கட்டமைப்பு ரீதியாக சாத்தியமற்றது, ஏனெனில் அதனால் ஏற்படும் பாதிப்புகளை எந்த மேற்கத்திய நிறுவனமும் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை.

அந்த சாத்தியம் மட்டும் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனென்றால் எப்ஸ்டீன் ஒரு பிறழ்ச்சி அல்ல, சம்பவங்களின் சாட்சியமாக இருந்தவர், உண்மையான ஊழல் அவர் அறிந்தவர் அல்ல, ஆனால் பெரும் நிதிப்பலம் உள்ளபோது அதிகாரம் எவ்வாறு நடந்துகொள்கிறது என்பதுதான் இந்த ஆவணங்கள் வெளிப்படுத்தும் உண்மை.. மேலும், எந்தவொரு ஆவணக் குப்பையையும் விட, இந்தக் கதை ஒருபோதும் உண்மையிலேயே முடிவடையாமல் போகக் காரணமும் அதுதான்.

**நன்றி: எக்ஸ் சமூக வலைத்தளம்.**

## $11 பில்லியனை ... தொடர்ச்சி...

பத்தியாளரை நான்காவது காலாண்டில் $11.1 பில்லியன் நிகர இழப்பிற்குத் தள்ளியுள்ளன.

2025 ஆம் ஆண்டில் $8.2 பில்லியன் முழு ஆண்டு நிகர இழப்பை அறிவித்துள்ள மிச்சிகனை தளமாகக் கொண்ட ஆட்டோ நிறுவனம், இந்த ஆண்டு அதன் லாபம் மீண்டும் உயரும் என்று எதிர்பார்க்கிறது.

"நாங்கள் இப்போது 2029 ஆம் ஆண்டில் லாபத்தை இலக்காகக் கொண்டுள்ளோம்" என்று ஃபோர்டின் தலைமை நிதி அதிகாரி ஷெர்ரி ஹவுஸ் செவ்வாயன்று(10) தெரிவித்துள்ளார்.

கார் தயாரிப்பாளரின் நான்காவது காலாண்டு லாபம் 2025 இல் $1 பில்லியனாகக் குறைந்துள்ளது, இது முன்னைய ஆண்டைவிட $1.1 பில்லியன் குறைவாகும். ஃபோர்டின் முக்கிய அலுமினிய வினியோக இரண்டு தொழிற்சாலைகள் தீ விபத்துகள் மற்றும் எதிர்பாராத $900 மில்லியன் வரிகள் ஆகியவற்றால் கடும் பாதிப்பை சந்தித்துள்ளதுடன், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரி அறிவிப்பினாலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இரண்டு பெரிய தீ விபத்துகளைச் சந்தித்த நியூயார்க்கில் உள்ள அலுமினிய ஆலை, இப்போது மே மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கு இடையில் மட்டுமே முழுமையாக செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இருப்பினும், வாகன உற்பத்தியாளரின் மின்சார வாகனப் பிரிவு, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக $4.5 பில்லியன் வரை இழப்புகளை சந்திக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. மலிவான, வேகமான சீன போட்டியாளர்களைப் ஈடுசெய்ய அமெரிக்க வாகன உற்பத்தியாளர்கள் போராடி வருகின்றனர். ஜெனரல் மோட்டார்ஸ் மற்றும் ஸ்டெல்லாண்டிஸ் ஆகியவை இதே போன்ற சவால்களை எதிர்கொள்கின்றன.

• • •

## ஏகபோக அரசியலுக்கு ... தொடர்ச்சி...

உயர்வுக்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்பாடு வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

### எதிர்கால சவால்களும் எதிர்பார்ப்புகளும்

சம்பள உயர்வு ஒரு ஆரம்பம் மட்டுமே. மலையக மக்களின் வாழ்வில் முழுமையான மாற்றம் ஏற்பட வேண்டுமாயின் அடிப்படை விடயங்களில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக லயன் முறைமையை ஒழித்து, ஒவ்வொரு குடும்பத்திற்கும் காணி உரிமையுடன் கூடிய தனிவீடு வழங்கப்பட வேண்டும்.

தோட்டப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை நீக்கப்பட்டு, உயர்கல்விக்கான வாய்ப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும். தேயிலைத் துறையை மட்டும் நம்பியிருக்காமல், மலையக இளைஞர்களுக்குத் தொழிநுட்ப மற்றும் நவீன வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் நுவரெலியா விஜயமும், தோட்டத் தொழிலாளர்களுடனான அவரது நேரடி உரையாடலும் இலங்கையின் அரசியல் கலாசாரத்தில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்துள்ளது.

போராட்டங்கள் இன்றிப் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள இந்தச் சம்பள உயர்வு, "அதிகாரத்தை மக்களிடம் கொண்டு சேர்ப்போம்" என்ற அரசாங்கத்தின் கொள்கைக்குச் சான்றாக அமைந்துள்ளது. மலையக மக்கள் இனி ஒரு 'வாக்கு வங்கியாக' மட்டும் பார்க்கப்படாமல், இந்த நாட்டின் கௌரவமான பிரஜைகளாக அங்கீகரிக்கப்படுவதற்கான பயணத்தில் இது ஒரு முக்கிய மைல்கல்லாகும். அதேநேரம் சம்பள உயர்வு விடயத்திலும் ஏனைய அடிப்படை விடயங்களிலும் மலையக மக்கள் குறித்து அரசாங்கம் தொடர்ந்தும் விசேட கவனம் செலுத்த வேண்டியதும் அவசியமாகும்.

• • •







இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



# தாயகமும் வாழ்வும்







